ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு நம்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யானம்

## அவதாரிகை

ஐச்வர்யம் முதலாக ஸகலபுருஷார்த்தங்களையும் விதிக்கிற ஶாஸ்த்ரமர்யாதையிலே நின்றார்கள் ருஷிகள். ஶாஸ்த்ர தாத்பர்யமாய் உத்தமபுருஷார்த்த லக்ஷணமான பகவத்ப்ராப்தியிலே நின்றார்கள் ஆழ்வார்கள். இப்புருஷார்த்தத்தின் எல்லைநிலமான ததீய ஶேஷத்வத்திலே நின்றார் ஸ்ரீமதுரகவிகள். இதுதான் இவர்க்கு வந்தவழியென்னென்னில்; ஆழ்வாரை, பொய்நின்ற ஞானம் தொடங்கி அவாவற்று வீடுபெற்றவளவும் செல்ல அநுவர்த்தித்த விடத்தில், அவர் தமக்கு உத்தேச்யமாகத் திருவாய்மொழியிலே பயிலுஞ்சுடரொளி, நெடுமாற்கடிமையிலே புருஷார்த்த காஷ்டையாக ததீயஶேஷத்வத்தையே அறுதியிடுகையாலே அவருடைய ருசிபரிக்ருஹீதமான அர்த்தத்தையே பற்றுகிறார் இவர்

இதுதான் ஸ்ரீராமாயண புருஷர்களில் ஸ்ரீஶத்ருக்நாழ்வான பக்கலிலே காணலாம். 3 "वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः" (வேதோபப்ருஂஹணார்த்தாய தாவக்ராஹயதப்ரபு:) என்கிறபடியே வேதோபப்ருஂஹணார்த்தமாகப் பிறந்த ஸ்ரீராமாயணத்தில் தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக அவதரிக்கையாலே ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரும் நாலுதர்மத்தை யநுஷ்டித்துக் காட்டினார்கள்.

"ஒருவன் சொல்லிற்று ஒருவன் செய்யக்கடவன்" என்கிற தர்மம் நேராக அழிந்து கிடக்கையாலே பித்ருவசந பரிபாலநாதிகளாலே ஸாமாந்யதர்மத்தை அநுஷ்டித்தார் பெருமாள். 4 "पितुर्वचननिर्देशात्" (பிதுர்வசந நிர்த்தேஶாத்) 5 "अगस्त्यवचनात्" (அகஸ்த்யவசநாத்) 6 "सुग्रीववचनात्" (ஸுக்ரீவவசநாத்) 7 "समुद्रवचनात्" (ஸமுத்ரவசநாத்) என்றிறே இவருடைய அநுஷ்டாநங்கள்.

"ஶேஷபூதன் ஶேஷியைக்குறித்து கிஞ்சித்கரிக்கக்கடவன்" என்கிற விஶேஷதர்மத்தை யநுஷ்டித்தார் இளையபெருமாள். 8 "कुरुष्व मामनुचरं" (குருஷ்வமாமநுசரம்) 9 "अहं सर्वं करिष्यामि" (அஹம்ஸர்வம் கரிஷ்யாமி) என்றிறே இவருடைய அநுஷ்டாநம்.

10 "राज्यं च तव रक्षेयमहं वेलेव सागरं। प्रतिजानामि ते वीर माभूवं वीरलोकभाक्" (ராஜ்யஞ்ச தவ ரக்ஷேயமஹம் வேலேவ ஸாகரம் ப்ரதிஜாநாமி தே வீர மாபூவம் வீரலோகபாக்) [ராஜ்யஞ்சதவ ரக்ஷேயம்] 11 "रक्ष धर्मेण बलेन" (ரக்ஷ தர்மேண பலேந) என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன். எனக்குத் தாதர்த்யம் ஸ்வரூபமானாலும், உம்மால் என்னை மீறவொண்ணாதாப்போலே [அஹம் வேலேவ ஸாகரம்] கடலுக்குக்கரை சேஷமாயிருக்கச்செய்தேயும் கரையை அதிக்ரமிக்கமாட்டாதிறே கடல். அப்படியே நீர் பெரியீரென்று, உம்மால் என்னை விஞ்சவொண்ணாது காணும். [ப்ரதிஜாநாமி] நான் இப்படி ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன். [தேவீர] ஒரு கோழை முன்னேயோ ப்ரதிஜ்ஞை பண்ணுகிறது. ப்ரதிஜ்ஞை பண்ணினால் அத்தைத் தலைக்கட்டித்தரவல்ல ஆண்பிள்ளைத் தனமுடைய உம்முடைய திருமுன்பேயன்றோ? [மாபூவம்] இப்படி செய்திலேனாகில் உம்முடைய ஸந்நிதியில் வர்த்திக்கப் பெறுதொழிகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப்பெறாதவனாகிறேன். [வீரலோகபாக்] உம்மை முடிசூடி அநுபவிக்கப் பாரித்து அதுபெறாதேபோன சக்ரவர்த்திபுக்க லோகம் புகுகிறேன் என்கிறபடியே நிர்ப்பந்தித்தடிமை செய்கையன்றிக்கே, சேஷியுகந்தவடிமை செய்யக்கடவதென்னுமிடத்தை அநுஷ்டித்தான் ஸ்ரீபரதாழ்வான்.

அப்படியிருக்கிற இவனையல்ல தறியாதேயிருக்கையாலே பகவச்சேஷத்வ காஷ்டையான ததீயசேஷத்வத்தை அநுஷ்டித்தான் ஸ்ரீசத்ருக்நாழ்வான். 12 "गच्छता मातुलकुलं भरतेन तदानघः। शत्रुघ्नो नित्यशत्रुघ्नो नीतः प्रीतिपुरस्कृतः॥" (கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: । சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத:)

"கச்சதா" என்கிற வர்த்தமாந நிர்த்தேசத்தாலே தனக்கொரு ப்ரயோஜநமுண்டாயாதல், பூர்வக்ஷணத்தில் போருகைக்கு நினைவுண்டாயாதலின்றியே அவனையொழிய ஜீவிக்க

மாட்டாமையாலே போனானென்கை. [மாதுலகுலம்] யுதாஜித்து அழைத்துவந்து அவனையானையாலே போக்கிலுத்தேச்யம் அவனுக்கு; இவனுக்கு அவன்பின்போகை உத்தேச்யமாய்ப் போனானென்கை. [பரதஃ] 13 "भरत इति राज्यस्य भरणात्" (பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்) என்கிறபடியே சக்ரவர்த்தியுமஞ்சி, பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப்போய், இளையபெருமாளும் அடிமை செய்யவேணும் என்றுபோய், ஸ்ரீஶத்ருக்நாழ்வானும் தன்னையல்லதறியேனென்றிருக்கிற தசையிலே ராஜ்யத்தை வஹித்துக் கொண்டிருந்தானென்கை.

---

[ததா] இருவரும் ராஜபுத்ரர்களாய் நக்ஷத்ரபேதமு முண்டாயிருந்தால் பிரிந்து முஹூர்த்தமிட்டுப் போகப்ராப்தமாயிருக்க, அவன்போனதுவே தனக்கு முஹூர்த்தமாகப் போனானென்கை. [அநகஃ] அகமில்லாதது இவனுக்கிறே. அல்லாதார்க்கு ராமபக்தியும் கலசியிருக்கையாலே பாபமிச்ரஜீவநமென்கிறது. ராமபக்தியைப்பாபமென்னப்போமோவென்னில், பாபத்தில் புண்யம் நன்றாயிருக்க மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும் 14 "पुण्यपापे विधूय" (புண்யபாபே விதூய) என்றுகொண்டு பாபஶப்தவாச்யமாகாநின்றது. ஆகையாலே பரதாநுவ்ருத்தியாகிற உத்தேச்யத்துக்கு விரோதியாகையாலே ராமபக்தியும் பாபமாயித்தனை.

[ஶத்ருக்ந:] பிள்ளைகளுடைய ஸந்நிவேஶங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற வஸிஷ்டபகவான் பெருமாள் கண்டாரை அழகாலே துவக்கவல்லரென்று தோற்றியிருக்கையாலே ராமனென்றும், இளையபெருமாளுக்குக் கைங்கர்யமே நிரூபகமாகத் தோற்றுகையாலே லக்ஷ்மணனென்றும், 13 "भरत इति राज्यस्य भरणात्" (பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்) என்று தோற்றியிருக்கையாலே ஸ்ரீபரதாழ்வானென்றும் திருநாமம்சாத்தி, இவனுடைய ஸந்நிவேஶத்தைக் காணவே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படியிருக்கக் காண்கையாலே ஶத்ருக்நனென்று திருநாமம் சாத்தினான்.

[நித்யஶத்ருக்ந:] பாஹ்யஶத்ருக்களையன்றிக்கே ஆந்தரஶத்ருவான இந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்கை. இந்த்ரியஜயத்துக்கு எல்லை எவ்வளவென்னில், 15 "पुंसां दृष्टिचित्तापहारिणं"

(பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணாம்) என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்டிருக்கை. அதாவது பெருமாளைப்பற்றும் போதும் தன்னுகப்பாலன்றியே அவனுகந்த விஷயமென்று பற்றுகை.

[நீத:] ராஜாக்கள் போம்போது உடைவாள் மற்றொருவன் கொண்டுபோமாபோலே அவன் கொண்டுபோகப் போனான். த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்டமாயிருக்கும். அதுபோலன்றியே ஜாதிகுணங்களோபாதி போனான். [ப்ரீதிபுரஸ்க்ருத:] "தமையன் பின்னே தம்பி போகக்கடவன்" என்கிற முறையாலே போனானல்லன். 9 "अहं सर्वं करिष्यामि" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்ற இளையபெருமாளைப்போலே எல்லா வடிமைகளும் போனவிடத்திலே செய்யலாமென்று பாரித்துக்கொண்டு ப்ரீதிப்ரேரிதனாய்ப் போனான். படைவீட்டிலிருந்தால் பரதாநுவ்ருத்தி, ஒருவர்க்கிட்ட சோற்றைப் பகிர்ந்துண்பாரோபாதி ஒக(ஹ)ரியாயிறேயிருப்பது.

பாஷ்யகாரர், "அநக:" "நித்யஶத்ருக்ந:" என்றவிதுக்கு ப்ரமேயமாகச் சொற்கட்டிலே "ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி அவனையல்லது அறியாத ஸ்ரீபரதாழ்வானையல்லது அறியாதபடியானான்" என்றருளிச்செய்வர். இதுவே ப்ரயோஜந(க)மானால் சொல்லும் மிகையெல்லாம் பொறுக்குமிறே. "அநக:" "நித்யஶத்ருக்ந:" என்ற பாவகத்வத்தாலும் போக்யதையாலும் அவனைப்பற்றினுமென்னவுமாம். இப்படி இவனைப்போலே இருப்பாரொருவர் ஸ்ரீமதுரகவிகள்.

இனி ததீயர் உத்தேச்யரென்னுமிடத்தில் முதலடியிலே அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டியும், இவன் பகவத்விஷயத்திலே அவகாஹித்து, குணாநுஸந்தாநத்தாலல்லது செல்லாதபடியானால் 16 "बोधयन्तः परस्परं" (போதயந்த: பரஸ்பரம்) என்கிறபடியே போதுபோக்குகைக்கு உசாத்துணையாயும், ப்ராப்திதசையில் வந்தால் 17 "यत्र पूर्वे साध्यास्सन्ति देवाः" (யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:) என்கிறபடியே ஸாத்யவிவ்ருத்திரூபத்தாலும் புருஷகாரபாவத்தாலும் உத்தேச்யராவர்கள். இப்படி ஸர்வாவஸ்தையிலும் ததீயரே உத்தேச்யரென்று அத்யவஸித்துத் தமக்கு உபகாரகரான ஆழ்வார்தம்மையே பற்றுகிறார்.

நம்பிள்ளை ஈட்டின் அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

# கண்ணிநுண்சிறுத்தாம்பு

1. கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே.

பதவுரை:—கண்ணி— (உடம்பிலே உறுத்தும்படி பல) முடிகளையுடைத்தாய், நுண்—(உடம்பிலே அழுந்தும்படி ஸூக்ஷ்மமாய்) சிறு—(நீளம்போராதபடி) சிறியதாயிருக்கிற, தாம்பினால்—கயிற்றினால் கட்டுண்ண பண்ணிய—யசோதைப்பிராட்டி தன்னைக்கட்டும்படி பண்ணுவித்துக்கொண்ட, பெரு மாயன்—பெரிய ஆச்சரிய சக்தியையுடையனாய், என் அப்பனில் — எனக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனைவிட்டு, நண்ணி—(ஆழ்வாரைக்) கிட்டி ஆச்ரயித்து, தென் குருகூர் நம்பி என்றக்கால்—தெற்குத் திசையிலுள்ள (ஆழ்வார் திருநகரியென்னும்) குருகூர்க்கு நிர்வாஹகரான ஆழ்வார் என்ற (அவரது திருநாமத்தைச்) சொன்னால், அண்ணிக்கும் — மிக இனிதாயிருக்கும்; என் நாவுக்கே—என் ஒருவனுடைய நாவுக்கே, அமுது ஊறும்— அம்ருதம் ஊறா நிற்கும்.

---

## நஞ்சீயர் வ்யாக்யானம்

முதற்பாட்டு—(கண்ணிநுண் சிறுத்தாம்பினாலென்று தொடங்கி) (கண்ணித்தாம்பு) அபலைகளாயிருப்பார் கட்டிவிட்ட தாம்பாகையாலே பலபிணையலாயிருக்கை. புஷ்பஹாஸ ஸுகுமாரமான கையாகையாலே அவிழ்க்கமாட்டானிறே. இப்பிணையல் திருமேனியிலே உறுத்து மென்றஞ்சுகிறார். (நுண்தாம்பு) பருத்துமேல் முதவாதே அழுந்துமென்றஞ்சுகிறார். (சிறுத்தாம்பு) அளவில்லாமையாலே உறுத்தித் திருமேனிநோமென்றஞ்சுகிறார்.

(கட்டுண்ணப் பண்ணிய) "உரலிடம் I காணவொண்ணாது" கயிற்றிலிடம் காணவொண்ணாது. விடில் கள்ளனாகையாலே ஓடிப்போம்

---

I (பா) குறைக்க

கட்டுண்ணுமாகவல்லேனே . என்ற தாயார் பாசுரத்தில் பயிர்ப்பு தீர ஒருசுற்றுக்குப்போராத தாம்பு இரண்டு சுற்றுக்குப் போரும்படி திருமேனியில் இடம் கொடுத்தபடி. ஆச்ரிதர்கையாலே கட்டுண்ணுவிடில் சீலத்துக்குப்போராது. அநாச்ரிதரைக்கட்டாவிடில் ப்ரபாவத்துக்குப் போராது. ராஜாவானவன் எதிரிகளைக் கட்டிவைக்கையும் பும்ஸ்த்வம்; தன்மஹிஷியின் கையில் பூமாலையாலே கட்டுண்டு கிடக்கையும் பும்ஸ்த்வம். (பெருமாயன்) இவருடைய ஆச்சர்யம் எத்திறமிருக்கிறபடி. அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தானத்தை இதர ஸஜாதீயமாக்குகையும், அவனுக்கு க்ஷுத்து நலிகையும், நவநீதத்திலே ச்ரத்தையுண்டாகையும், அத்தை இடுவாரில்லாதபோது களவுகாண்கையும், அதனைத் தன்னுட்டாமாட்டாதே வாயது கையதாக அகப்படுகையும், ருஜ்யர்கையிலே கட்டுண்கையும், ஸம்ஸார பந்தத்தைத் தவிர்க்கவல்லனான இத்தை விட்டுக்கொள்ளமாட்டா தொழிகையும், இதென்ன ஆச்சர்யமோவென்கிறார். இவனுடைய மேன்மை எல்லைகாணலாம்; நீர்மை தரைகாணவொண்ணாது.

(என்னப்பனில்) இத் ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான அர்த்தமாகையாலே க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லிற்று; மேல் உத்தேச்யமான விஷயத்தைச் சொல்லாதே அவனை என்னப்பனென்பானென்னென்னில், ஆழ்வார் அங்கீகரிக்கைக்காக அங்கே தமக்கொரு ஸம்பந்தம் சொல்லுகிறார். ஒன்றைக்குறித்துப் போம்போது "நீரும்நிழலும் நன்றாயிருந்தது" என்று ஒதுங்கினால் உத்தேச்யமாகவேணுமோ?

(நண்ணி) இப்படுகுழியைத் தப்பினவிறே என்கிறார். படுகுழியென்பானென்னென்னில்; பகவத் ப்ராப்திக்கு சப்தாதிவிஷயங்கள் விரோதியானாப்போலே ஆழ்வாரைப்பற்றுகிற இவர்க்கு பகவத்விஷயம் விரோதியென்றபடி. அவற்றுக்கு அல்பாஸ்திரத்வாதி தோஷமுண்டாகையாலே விடலாம். இங்கு அங்ஙனன்று; நிலைநின்ற ப்ரதிபந்தகம். (தென்குருகூர்நம்பி) ஸர்வேச்வரன் ப்ராப்யத்தில் ப்ரதமாவதியாகையாலே அரையயிருகப்பேசி, ஆழ்வார் சரமாவதியாகையாலே பூர்ணராகப் பேசுகிறார். (என்றக்கால்) பகவத்விஷயத்தில் மநோவாக்காயங்கள் மூன்றும் அந்வயிக்கவேணும்; அதெல்லாம் வேண்டா; உக்திமாத்ரமமையும் இங்குத்தைக்கென்கிறார். (அண்ணிக்குமமுதூறும்) ரஸபதார்த்தங்களிற்காட்டில் இதுக்கு வ்யாவ்ருத்தி; எல்லாப்பதார்த்தங்களும் நாக்கிலே இட்டால் இட்டபதார்த்தம் மாண்டவாறே ரஸமும் மாளும். இது அங்ஙனன்றிக்கே ஒருகால் இட்டால் உள்ளதனையும் அமுது ஊற்றுமாறுதென்கிறார். (என் நாவுக்கே) அவர்கள் "எங்களுக்கு இங்ஙனிருக்கிறதில்லை" என்றார்கள்; பகவத்விஷயமும் ரஸித்து அதுக்கெல்லைநிலமான பாகவதவிஷயத்தவும் ரஸித்த என் நாவுக்கல்லது; அதவா; எதுரஸித்துப்போந்த நாவுக்கு எது ரஸிக்கிறதுதான். இத்தால் சொல்லிற்றாய்த்து ப்ரதமாவதியோடு சரமாவதியோடு வாசியற இவர் ஆழ்வாருக்கு அநந்யார்ஹரானபடி.

முதற்பாட்டுக்கு நஞ்சீயர் வ்யாக்யானம் முற்றிற்று.

## நம்பிள்ளை ஈடு

முதற்பாட்டு (கண்ணியித்யாதி) / "உரவிஞேடிணைந்திருந்தேங்கிய வெளிவு எத்திறம்" என்றும், § "பிறந்தவாறும்" ‡ "பையவேநிலையும்" என்றும் அவர் உத்தேச்யமாகப் பற்றுகிற விஷயமிறே இவருக்கு இப்போது வெளிறுப்புக்கழியுண்கிறது. நவநீதசௌர்யகரசேஷ்டிதத்தை அநுஸந்தித்து அவர்மோஹித்துக் கிடக்கும் துறையிலேயிறே இவர் இப்போது தெளிந்திருந்து வார்த்தை சொல்லுகிறது. (கண்ணிநுண்சிறுத்தாம்பினால்) ஆழ்வார் பக்கலிலே பந்தபரரானபடி; அவருடைய உத்தேச்ய வஸ்துவைக்கட்டின கயிற்றினுடைய உள்மானம் புறமானம் ஆராயும்படியிறே இவர் கைபொழிந்தபடி பகவத்விஷயத்திலே.

(கண்ணித்தாம்பு) உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பலபிணையலை உடைத்தாயிருக்கை. (நுண்தாம்பு) உடம்பிலே அழுந்தும்படி நேரிதாயிருக்கை. (சிறுத்தாம்பு) குறுகியிருக்கை. உரலைச் சுருக்கவொண்ணாது; கயிற்றை நெடுக்கவொண்ணாது. 43 "सदेकरूपरूपाय" (ஸதைகரூப ரூபாய) என்கிற இவனுடைய உடம்பை நெருக்கி இடங்கண்டு கட்டுமித்தனையிறே செய்யலாவது. || "கண்ணியார் குறுங்கயிற்றால் கட்டவெட்டென்றிருந்தான்" என்றும் † "கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ" என்றும் எல்லாரும் ஈடுபடுந்துறையிறே இதுதான்.

(கட்டுண்ணப்பண்ணிய) 44 "संसारबन्धस्थितिमोक्षहेतुः" (ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேது:) என்று ஸ்வவ்யதிரிக்தரைக் கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன்கிடீர் இப்போது ஓரபலை கட்டின கட்டை அவிழ்த்துக்கொள்ள ஶக்தனன்றிக்கேயிருக்கிறான். 45 "यदि शक्नोषि गच्छ त्वमतिचञ्चलचेष्टित" (யதிஶக்நோஷி கச்ச த்வ மதிசஞ்சலசேஷ்டித) என்னுமிறே. ஸார்வபௌமனான ராஜகுமாரன் தன்மஹிஷிகையிலே அகப்பட்டு ஒருமாலையாலே

/ திருவாய் 1-3-1. § திருவாய் 5-10-1. ‡ திருவாய் 5-10-3.
|| பெரியதிரு 5-6-7. † பெரியதிரு 11-5-5.

கட்டுண்டு அதுக்கொரு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதே யிருக்குமாபோலேயிறே இவள் கட்டினவிதுக்கு ப்ரதிக்ரியைபண்ண மாட்டாதேயிருக்கிற இருப்பும்; பிறருடைய கர்மநிபந்தநமான கட்டை அவிழ்க்குமத்தனையல்லது தன்னநுக்ரஹத்தால் வரும் கட்டு தன்னாலும் அவிழ்க்கப்போகாது; "இனிமுக்தனாகில் போய்க்காணாய்" என்று அவள் சொல்லும்படியிறே இவனுடைய அமுக்தி. §"தொழுகையும்" என்று கொண்டு போக்கற்றவாறே தொழத்தொடங்குமத்தனையிறே; எல்லாரையும் தொழுவித்துக்கொள்ளுமவனிறே தொழுகிறான்; "போக்கற்ற தஶையிலே அஞ்ஜலியே அபிமதஸித்திக்கு ஸாதநம்" என்றறியுமவனிறே. "அதிசஞ்சலசேஷ்டித" என்று துருதுருக்கையாய் ஊரைப்பூசல் விளைத்துத்திரிந்த நீ வல்லையாகில் போய்க்காணென்கிறாள். 45"इत्युक्त्वा" (இத்யுக்த்வா) ஒருசொல்லாலே விலங்கிட்டு வைத்து. 45"अथ निजं कर्म सा चकार" (அத நிஜம் கர்ம ஸா சகார) அவள்தான் கறப்பது கடைவதாகப் புக்காள். 45"कुटुम्बिनी" (குடும்பிநீ) இவனைப் போலே நியமிக்கவேண்டுவன எத்தனை கிடக்கிறன.

(பெருமாயன்) நிரதிசயாச்சர்யயுக்தன். அவாப்தஸமஸ்தகாமனுக்கு ஒருகுறையுண்டாய், அதுதன்னை எளியாரைப்போலே வழியல்லாவழியே களவிலே ஒருப்பட்டு, அது தன்னையும் ஸர்வஶக்தியாய் தான் தலைக்கட்டமாட்டாதே வாயதுகையதாக அகப்பட்டுக்கட்டுண்டு அடியுண்டு அதுக்கொரு ப்ரதிக்ரியைபண்ண மாட்டாதே ||"பையவே நிலையும்" என்று உடம்புவெளுத்துப் பேகணித்து நின்ற நிலையளவும்செல்ல நினைக்கிறார்.

(என்னப்பனில்) என்னையனில்; ஆழ்வார் உத்தேஶ்யமாய்ப் போகாநிற்கச்செய்தேயும் *பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியான விஷயமாகையாலே அவ்வருகு போவாரைத் துவக்கவல்ல விஷயமாகையாலே சொல்லுகிறார். பகவத்விஷயத்தில் அடியற வார்த்தை சொன்னாராகில் ஆழ்வாரோட்டை ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டாராவரிறே. (என்னப்பனில் நண்ணி) பகவத்

§ பெரு-திரு 7-8. || திருவாய் 5-10-3.

விஷயத்தில் நின்றும் ஆழ்வார்பக்கலிலே கிட்டி; விஷயப்ரவணன் ஶப்தாதி விஷயங்களைவிட்டு பகவத்விஷயத்தைக் கிட்டுகையிலுண்டான அருமைபோரும் இவருக்கு பகவத்விஷயத்தை விட்டு ஆழ்வாரளவும் வருகைக்கு; ஶப்தாதிவிஷயங்களை விடலாம், அவற்றின் தோஷதர்ஶநத்தாலே; அங்ஙனொருதோஷம் காண விரகில்லாமையாலே அதிலும் அரிது இது; ஆனால் இத்தை விடவேண்டுவானென்னென்னில்: சரமாவதியில் போவார்க்கு ப்ரதமாவதியில் நிற்கையும் குறையென்னுமதினாலே.

(தென்குருகூர்நம்பி) ஆழ்வார் தாம் உத்தேச்யமாகப் பற்றின விஷயத்துக்குள்ள குறையுமில்லையிறே இவர்பற்றுகிற விஷயத்துக்கு. எங்ஙனேயென்னில்; பகவத்விஷயத்தைப் பற்றினால் அதினெல்லையான ஆழ்வாரளவும் வரவேண்டியிருக்கும்; ஆழ்வாரைப் பற்றினால் அவ்வருகு கந்தவ்யபூமியில்லையிறே. (என்றக்கால்) வாங்மந:காயங்கள் மூன்றும் வேண்டியிருக்கும் பகவத்விஷயத்துக்கு; உக்திமாத்ரமேயமையும் இவ்விஷயத்துக்கு.

(அண்ணிக்கும்) தித்திக்கும். பகவத்விஷயத்தை அநுபவித்தால் ஆழ்வாருக்குப்பிறக்குமாநந்தமெல்லாம் இவ்விஷயத்திலே ஒருக்திமாத்ரத்தாலே பெற்றேனென்கிறார். (அமுதூறும்) அமுது தான் வற்றமாறாதே செல்லாநிற்கும். 46 "न च पुनरावर्तते" (ந ச புநராவர்த்ததே) என்று அவ்விஷயம் நித்யாபூர்வமாய் ஆழ்வாருக்குச் செல்லுமாபோலே எனக்கு இவ்விஷயம் நித்யாபூர்வமாய்ச் செல்லப்பெற்றேன். (என்நாவுக்கே) பின்னை எங்களுக்கு ரஸிக்கிறதில்லையோவென்னில், முதலடியான பகவத்விஷயமுங்கூட ரஸியாதேயிருக்கிற உங்களுக்கு, அதினுடைய எல்லையான ஆழ்வாரளவும் ரஸிக்கும்படியான எனக்கு ரஸிக்குமாபோலே ரஸிக்குமோ? (என்நாவுக்கே) அநாதிகாலம் எதுரஸித்துப் போந்த நாவுக்கு எது ரஸிக்கிறதென்றுமாம். இப்பாட்டால் ஆழ்வாரென்றால் தமக்கு ரஸித்திருக்குப்படி சொன்னார்.

முதற்பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண் சிறுத்தாம்பின்

# இரண்டாம் பாட்டுக்கு

## நஞ்சீயர் வ்யாக்யானம்.

2. நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்
மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே.

அவ:—இரண்டாம்பாட்டு. ஆழ்வாருடைய ஏற்றம் ஒருகதயாமல இச்சரீரத்தோடே அநுபவிக்கலாமென்கிறார்.

வ்யா:—(நாவினால் நவிற்று) 100 “मनः पूर्वो वागुत्तरः” (மந: பூர்வோ வாகுத்தர:) என்கிறவதுவும் வேண்டாவிறே இங்குத்தைக்கு. எல்லாக் கரணங்களால் ப்ரவர்த்தித்தார் பெறும் பேற்றைக்காணும் இவர் வாக்கொன்றாலும் பெற்றது. 101 “प्रत्यक्षे गुरवः स्तुत्याः” (ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:) என்கிறபடியே பகவத்விஷயத்தில் உபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணுகைக்கன்றோ நாக்கு கண்டது: ஈச்வரன் ஸ்ருஷ்டித்த லாபமும் பெற்றேனென்கிறார். (இன்பமெய்தினேன்) ரஸத்தினெல்லையைப் பற்றினேன். *சூழ் பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம் அரைவயிறென்னும்படியிறே இவர் பெற்றபேறு.

இவர்பெற்றலாபமென்னென்னில்: (மேவினேனவன் பொன்னடி) ‡“கோலமாமென் சென்னிக்குன் கமலமன்ன குரைகழல்” என்றும் §“தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே” என்றும் சொல்லுகிற படியே எல்லாம் இவர்க்கு இங்கேயாகிறது. (மெய்ம்மையே) இது எத்தனைகுளிக்கு நிற்குமென்னில்: 102 “विज्ञापनमिदं सत्यं” (விஜ்ஞாபநமிதம் ஸத்யம்) என்கிறார். /“இமையோர்தலைவா மெய்நின்று” என்றார் ஆழ்வார். “குருகூர்நம்பி பொன்னடி மேவினேன் மெய்ம்மையே” என்கிறார் இவர்.

(தேவுமற்றறியேன்) வேண்டாவென்கிறேனென்று; வ்யுத்பத்தி யில்லாமை. i “भावो नान्यत्र गच्छति” (பாவோ நாந்யத்ர கச்சதி

‡ திருவாய் 4-3-6. § திருநெடு-1. / தருவி-1.

"அந்யத்ர" என்றாப்போலே "மற்றறியேன்" என்கிறார் விட்டவிஷயத்தின் பேர் சொல்லாமைக்கு; (குருகூர்நம்பி) ஆழ்வாரையுமுகந்து அவருக்கு ஆச்ரயணீய வஸ்துவையும் உகக்கும்படியன்றிறே ஆழ்வாருடைய பூர்த்தியிருக்கும்படி.

(பாவினின்னிசை) பாவிலே பூண்ட இனியவிசை; ஐச்வர்யத்தை அல்பாஸ்திரமென்று கழித்து, ஸ்திரமான ஆத்மப்ராப்தியை அபுருஷார்த்தமென்று கழித்து, ஸ்திரமுமாய் பரமபோக்யமுமான பகவத் ப்ராப்தியை ப்ராப்யத்தில் ப்ரதமாவதி என்றுகழித்து, இதில் சரமாவதி யான ஆழ்வாரையும் உத்தேச்யரன்று என்றுகழித்து, அவரோடு ஸம்பந் தித்த விஷயத்தையும் ரஸாச்ரயமன்று என்றுகழித்து, அத்தோடு ஸம்பந் தித்த இசையே எனக்கு உத்தேச்யமென்கிறார். †"தெய்வத்தண்ணந் துழாய்த் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டுவீசுமினே" இத்யாதியிற்படியே பகவத்ஸம் பந்தம் போகப்போக நிறம்பெறுகிறபடி. (பாடித்திரிவனே)ரஸாயநஸேவை பண்ணித் திரிவாரைப்போலே. இதுகாணும் இவருக்கு தாரகமாய் ஸஞ்சரிக்கப்பண்ணுகிறது.

இரண்டாம்பாட்டு

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

† திருவிரு-53

# நம்பிள்ளை ஈடு.

அவ:— இரண்டாம்பாட்டு. ஆழ்வாருடைய பாசுரமே தமக்கு தேஹயாத்ரையாம்படி தாரகமானபடி சொல்லுகிறார்.

வ்யா:—(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) "என்றக்காலண்ணிக்கு மமுதூறும்" என்று ப்ரஸ்துதமானது தன்னையே அநுபாஷிக்கிறார். (நாவினால் நவிற்று) மநஸ்ஸஹகாரமில்லையென்கிறார். 101. "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:) என்கிறபடியே பகவத்விஷயத்திலுபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவதைக்கொண்டு அந்தக் கார்யம் கொள்ளப்பெற்றேனென்கிறாரென்னவுமாம்; ஈச்வரஸ்துஷ்டிக்கு ப்ரயோஜகம் கொள்ளப்பெற்றேன் நானொருவனுமேயென்கிறார்.

(இன்பமெய்தினேன்) § "வீவிலின்பம்மிகவெல்லை நிகழ்ந்தனன்மேவியே" என்று ஆழ்வார் அவ்விஷயத்தில் பெற்றபேற்றை இவ்விஷயத்தில் உக்திமாத்ரத்தாலே பெற்றேனென்கிறார். ஒரு கரணத்தாலே ஒரு பாபத்தைப்பண்ணினால் ஒருகல்பம் நரகாநுபவம்பண்ணி, கல்பாந்தரமும் நரகாநுபவம் பண்ணவேண்டும்படியாயிருப்பது; அப்படிக்கு யோக்யமான கரணத்தாலே நிரதிசயாநந்தத்தை ப்ராபித்தேன்.

(மேவினேனவன் பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளே உத்தேச்யமாகப்பொருந்தினேன்; ப்ராபித்தேனென்கை; எங்ஙனே பொருந்தினபடியென்னில், மெய்ம்மையே பொருந்தினேன்; இவரை உபகாரககோடியிலேயாக்கி வேறொன்று உத்தேச்யமாய்க் கிட்டினவாறே அதிலே தோள்மாறும்படியன்றிக்கே ஆழ்வார் திருவடிகளே உத்தேச்யமாகப் பொருந்தினேன்; இங்கிருக்கும் நாள் அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே உபகாரகராகவும் பகவத்விஷயத்துக்குப் புருஷகாரமாகக் கொண்டும், அவ்வருகே சென்றால் 103 "यत्र पूर्वे साध्याः सन्ति देवाः" (யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:) என்கிறபடியே

ஸாத்மவிஷ்ருத்திருபத்தாலே உத்தேச்யராகவும் இவர் தம்மையே பற்றினேன்.

(தேவுமற்றறியேன்) ஆழ்வாரையொழிய வேறொரு ஆச்ரயணீய வஸ்து உண்டென்றறியேன். "மெய்ம்மையே" என்றவிடம் அந்வயத்தாலே சொன்னார். "தேவுமற்றறியேன்" என்கிறவிடம் வ்யதிரேகத்தாலே சொல்லுகிறார். "மற்றறியேன்" என்கிறது எத்தையென்னில்; கீழ்ச்சொன்னவற்றை எல்லாமென்கிறார். ஐச்வர்யமென்ன, ஆத்மலாபமென்ன, அவற்றைவிட்டு, பகவல்லாபத்தளவிலும் நில்லாதே அதினெல்லையான ஆழ்வாரளவும் போந்தாரானபாலே அவற்றையெல்லாம் நினைக்கிறார்.

(குருகூர்நம்பி) இவரையுப்பற்றி வேறேயொரு வஸ்துவையும் பற்றும்படியோ இவருடைய பூர்த்தியிருப்பது? "குருகூர்நம்பிபா" என்றது கண்ணிநுண் சிறுத்தாம்பென்னுதல்; திருவாய்மொழியென்னுதல். திருவாய்மொழிதன்னில் "குருகூர்ச் சடகோபன்" என்றாரிறே. அவ்வழியாலேயாய்த்துத் திருவாய்மொழிதன்னையும் இவராதரிப்பது.

(பாவினின்னிசை) இயலோடேசேரப் புணர்ப்புண்டவின்னிசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஹயாத்ரை நடப்பித்துப் போரும்படியென்னென்னில்; ப்ரீதிப்ரேரிதனாய்க் கொண்டு இவற்றைச் சொல்லி இதுவே தாரகமாக அத்தாலே ஸஞ்சரிப்பன். (பாடித்திரிவன்) / "நமன்றமர்தலைகள்மீதே நாவலிட்டுழி தருகின்றோம்" என்று என்னுடைய கதிவ்ருத்தியைப் பண்ணவல்லாருண்டோ? என்றுமாம்.

இரண்டாம் பாட்டுக்கு நம்பிள்ளையீடு முற்றிற்று.

## மூன்றும்பாட்டு

திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரியகோலத் திருவுருக்காண்பன்நான்
பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கா
ளுரியனாய்அடியேன்பெற்ற நன்மையே.

பதவுரை:— திரிதந்தாகிலும்-(ஆழ்வாரை விட்டு) மீண்டாகிலும், தேவபிரானுடை— நித்ய ஸூரிகளுக்குத்தலைவனான எம்பெருமானுடைய, கரிய—(நீலமேகம்போல்) கறுத்ததாய், கோலம்– அழகியதான, திருவுரு— திவ்ய ரூபத்தை, நான் காண்பன்—நான் ஸேவிப்பேன்; பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு — பெருமையும் ஔதார்யமுமுடைய ஆழ்வார்க்கு, உரிய ஆள் ஆய்— அநந்யார்ஹ ஶேஷபூதனாயிருக்குமவைத்து, அடியேன் பெற்ற நன்மை— அடியேன் பெற்றபேறு இது காணீர்.

---

## நஞ்சீயர் வ்யாக்யாநம்

அவ:— மூன்றும் பாட்டு. ஆழ்வாருகந்த விஷயமென்று உகக்கிறார்

வ்யா: — (திரிதந்தாகிலும்) 46"न च पुनरावर्तते" (ந ச புநராவர்த்ததே) என்கிறது பகவத்விஷயத்தையிறே; அத்தை முதலடியாகக்கொண்டு முடிந்த நிலத்தளவிலேபோனால் போனவழியெல்லாம் மீளவேண்டும்படியிறே ஆழ்வார் திருவடிகளில் தமக்குண்டான பாரதந்த்ர்யமிருக்கும்படி.

(தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன் நான்) நித்ய ஸூரிகளுக்குப் படிவிடும் வடிவகாணும் இவர் வேண்டாவென்கிற விஷயமிருக்கும்படி. இவ்வளவும் இவர்க்கு உத்தேச்யராகப் பெற்றிலோமாகிலும் உத்தேச்யருக்கு உத்தேச்யராகப் பெற்றோமிறே. 112 "पाणौ गृहीत्वा विदुरं सात्यकिञ्च महायशाः। ज्योतींष्यादित्यवद्राजन् कुरून् प्रच्छादयन् श्रिया" (பாணௌ க்ருஹீத்வா விதுரம் ஸாத்யகிஞ்ச மஹாயஶா:। ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந் ப்ரச்சாதயந் ச்ரியா) என்கிறபடியே நெஞ்சால் பொருந்தாமையன்றிக்கே கண்ணால் காண்கையும் மிகையாயிருக்கிறபடி. 113 "तरुणौ रूपसंपन्नौ" (தருணௌ ரூபஸம்பந்நௌ) என்றிறே முறைப்படுவார் வார்த்தையும்; விஷயமிருந்தபடி பேசவேணுமிறே.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) ஸர்வநிரபேக்ஷரான ஆழ்வாருக்கு. ஆழ்வாரொருவர்க்குமிறே ஈச்வரன் மயர்வறமதிநல மருளிற்று. இவர் ஜகத்துக்காக மயர்வறமதிநல மருளினாரிறே. இவரையும் காட்டித்தரு மூராகையாலே வண்மையின் மிகுதி சொல்லுகிறது. விசேஷஜ்ஞரடங்கத் திரண்டவூரிறே. அங்குத்தைக்கு நிர்வாஹகரான பூர்த்தியு முண்டிறே இவர்க்கு; நாம் சொல்லும்போதும் ¹"பெரியவண்குருகூர் வண்சடகோபன்" என்றிறே சொல்லுவது; இவருடைய நாராயணத்வமிருக்கிறபடி. (ஆஞரியமு யடியேன்பெற்றநன்மையே) "அடியேன்" என்கையாலே இவருடைய சதுர்த்தியிலர்த்தத்தைக் காட்டுகிறது. அதாவது சேஷி உகந்ததை உகக்குமதிறே கைங்கர்யத்தினெல்லை நிலமாகிறது.

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

—

# நம்பிள்ளை ஈடு

அவ:—மூன்றாம் பாட்டு. (திரிதந்தாகிலும்) "தேவுமற்றறியேன்" என்றார்கீழ். ஆழ்வார்பற்றின விஷயமென்று அவ்வழியாலே பற்றுகிறார். கிடந்தானை கண்டேறுமாபோலே தந்தலையாலே வருமதிறே தவிர்த்துக்கொண்டது. /"தங்கள் தேவரைவல்ல பரிசுவருவிப்பரேல்" என்று அந்தலையாலே வருமது தவிர்த்துக்கொண்டிலரே. ஸமர்ப்பணையைப்போலே வழியல்லா வழியே வருமதையிறே தவிர்த்தது; ஆழ்வார் தலையாலே வருமது தவிர்ந்திலரே. 21"भवतः परमो मतः"(பவத: பரமோ மத:) என்றுகேட்க 22 "धर्मोऽधिकतमो मतः"(தர்மோதிகதமோ மத:) என்று ஆசார்யருசி பரிக்ருஹீதமாய் வருமது ஏதேனுமாகிலுமமையும் இவர்க்கு.

குணமலைப்பாடியுடையார் காங்கேயர் தெற்கே எடுத்துவிடுகிற வளவிலே கோயிலாச்சான் இவருக்குச் சில அரிசியும் பச்சையும் வரக்காட்டினான். அப்போது ஸங்குசிதமாயிருக்கையாலே உபேக்ஷிதமாயிருக்குமிறே. இவ்வளவிலே உபகரித்தவனுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணவேணுமென்று நினைத்திருந்து பின்பொருகாலிலே கண்டு "எங்கள் பக்கலிலேயும் ஒருபகாரம் கொள்ளவேணும்"

---

¹ திருவாய் 8-1-11. / நாச்-திரு 13-10.

என்ன, "நா[illegible], [illegible]யறியாமல் எங்ஙனே கொண்டபடி" என்ன, "எங்களாசார்யர் கோயிலளவிலே நீர் நகூலித்தபடியை நினைத்து 'அவ்வேளாளனாலே இப்மண்பெற்றோம்' என்று பலகாலு மருளிச்செய்யக்கேட்டேன். இனிக்கொள்ளவேண்டுவதொரு உபகாரமில்லை" என்றான்.

த்ரிபுராதேவியார் வடகீழ்மூலைதத்வத்தையும் ஆச்ரயணீய வஸ்துவென்று நினைத்திரானை எம்பெருமானார் அங்கீகரித்தாரா யில்; அவரங்கீகரியாமையன்றோ அவரதேவதையாக நினைத்திருக் கிறதென்றார்.

வ்யா:—(திரிதந்தாகிலும்) திரிகையாவது மீளுகை; மீண்டா கிலும்; தாவென்று அதுக்கு அடையான சொல்லாய், திரிதந் தாகிலுமென்றது போனவழியெல்லாம் மீண்டாகிலும். அதாவது ஆழ்வார் புணர்ப்பைவிட்டு, ஆழ்வார் தம்மைவிட்டு, இவ்வளவும்வந்து.

(தேவபிரானுடைக் கரியகோலத்திருவுருக் காண்பன்) இவர் தாம் நின்றநிலை குலைந்து பகவத்விஷயத்திலே நிற்கும்போதும் நித்யஸூரிகளுடைய யாத்ரையேயாய்த்திருப்பது. (தேவபிரான்) நித்யஸூரிகளுக்குத் தன்னை முற்றூட்டாக அநுபவிக்கக்கொடுத் துக்கொண்டிருக்கும் உபகாரகன். (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுரு) யோகப்ரஷ்டர் ஊர்வசியினுடைய வடிவழகை வர் ணிக்குமாபோலே சொல்லுகிறார். / 'கோலமேதாமரைக் கண்ணதோ ரஞ்சனநீலமே" என்று ஆழ்வார் சொல்லக்கேட்டிருக்கும் செவி யேற்றாலே சொல்லுகிறார். (காண்பன்) யோகப்ரஷ்டனுக்கு விஷயம் கண்ணுக்கு இலக்காமாபோலே ஆழ்வாரை விட்டால் பகவத் விஷயமாய்த்து இவர் காண்பது. (யான்) இப்படி ஸங்யவித்துப் போந்த நான்.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) "நான் ஒன்றைப்பற்றி னேன்; ஒன்றைவிட்டேன்" என்று சொல்லலாம்படியோ ஆழ் வாருடைய பூர்த்தியிருப்பது? (ஆளுரியனாய்) உரியவடியனாய்.

/ திருவாய் 3-8-8.

[illegible]யார்க்குத் தந்தாமுக்கென்ன ஒரு ப்ரியாப்ரியங்களின்றி [illegible]யாமிபற்றினதைபபற்றி அவன் காற்கடைக்கொண்டதைக் [illegible] கொள்ளுமத்தனையாய்த்திருப்பது.

[illegible]காலத்திலே "எம்பெருமானார் ஸம்பந்தமுடையாரை [illegible]வேண்டா" என்று தகைந்தார்களாய், அவ்வளவிலே [illegible] அங்கேசெல்ல, "இவருக்கு ஒருவருடன் விரோதமில்லை. [illegible]தோ" என்ன, "ஆத்மகுணங்கள் மோக்ஷஹேது [illegible] அநாத்மகுணங்கள் பந்தஹேதுவாகவும் நினைத்திருந் [illegible] ஆத்மகுணங்கள் பந்தஹேதுவாய்த்தே" என்று, "நம் [illegible]ரோட்டை ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு உள்ளுப் [illegible]" என்று போந்தான்.

(அடியேன்) ஆழ்வாருடைய நீர்மையிலே தோற்று அடியே [illegible]ர். (பெற்ற நன்மையே) முன்புவிட்ட ஸப்தாதி விஷ [illegible]பாதி, ஆழ்வார் நன்றென்றுபற்றின பகவத்விஷயத்தைத் [illegible]மாட்டாரே. ஆகையாலே "பெற்றநன்மையே" என் [illegible]. ஆழ்வார் என்னை உகவாநிற்க நான் அவருகந்த [illegible] உகவாதொழிவேனோ?

மூன்றும் பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.



## நாலாம்பாட்டு

4. நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலில்
அன்னையாயத்தனை யென்னையாண்டிடும்
தன்மையான் சடகோப னென்னம்பியே.

பதவுரை:—நன்மையால் மிக்க—நற்குணத்தால் மேன்மை பெற்றவர்களாய், நால் மறை ஆளர்கள்—நான்கு வேதங்களிலும் வல்லவர்களான வைதிகர்கள், (என்னை) — அடியேனை, புன்மை ஆக கருதுவர் ஆதலில் — தாழ்வே ஒரு வடிவு கொண்டதென்றெண்ணி உபேக்ஷித்திருப்பரென்பதுவே காரணமாக, அன்னை ஆய்—மாதாவாயும், அத்தன் ஆய்—பிதாவாயும், என்னை ஆண்டிடும் தன்மையான் — அடியேனைக் கைக்கொண்டருளுமியல்வினரான, சடகோபன்—நம்மாழ்வார்; என் நம்பி—எனக்குத் தலைவர்.

---

# நஞ்சீயர் வ்யாக்யாநம்

அவ:—நாலாம்பாட்டு. உமக்கு இந்த நன்மைக்கு அடியென்னென்னில், ஸத்துக்களாலும் கர்ஹிதனானவென்னை பித்ராதிகள் செய்வதும் செய்து உபகரித்தானென்கிறார். இப்படி ஆழ்வார் உம்மை விஷயீகரிக்கைக்கு சீரிட்ட பச்சையென்னென்னில், ஸத்துக்களும் கைவிடும்படி / தண்ணியனானேனென்கிறார்.

வ்யா:—(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்) பரதுக்காஸஹிஷ்ணுக்களாய் பரஸம்ருத்த்யேக ப்ரயோஜநராய் 119 "पूर्वभाषी प्रसन्नात्मा "(பூர்வபாஷீ ப்ரஸந்நாத்மா) என்றும், 120 "विमलमतिः" (விமலமதி:) என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளையுமுடைய கூரத்தாழ்வானும் ஆண்டாளும் பிராட்டியும்போல்வார். வேதங்கள் கோஷித்ததையும் கைப்படுத்திக்கொண்டிருக்குமவர்கள் I "அந்தணர்மாடு" என்கிறபடியே வேதைகதநராயிறே இருப்பது. 121 "द्रवन्ति दैत्याः" (த்ரவந்தி தைத்யா:) என்கிறபடியே வேதங்களும் ஏவிற்றுச்செய்யும்படி போலேகாணும் இவர்கள் வேண்டப்பாடு. (புன்மையாகக் கருதுவர்) புன்மையும் புன்மைக்காச்ரயமாகையுமன்றியே புன்மையே தானாகக்கருதுவர்கள். (ஆதலில்) அதுவே ஹேதுவாக.

(*) தண்ணியனானை. I திருநெடு 4.

(அன்னையாயித்யாதி) "நம்மையொழியப் புறம்பு இவனுக்கு எங்கும் புகலில்லை" என்று ஸர்வவிதபந்துவுமானுர்; ப்ரியத்துக்குக் கடவ மாதாவும் ஹிதத்துக்குக் கடவபிதாவும், ஹிதைஷியான ஆசார்யனுமாகையை ஸ்வபாவமாகவுடைய ஆழ்வார். 39 "मातृदेवो भव" (மாத்ருதேவோ பவ) இத்யாதிகளிற்படியையுடைய ஆழ்வார். (சடகோபனென் நம்பியே) தன் குற்றத்தைப் போக்குமளவன்றியே என் குற்றத்தைப் போக்கும்படி நிரபேக்ஷர்.

நாலாம்பாட்டுக்கு நஞ்சீயர் வ்யாக்யானம் முற்றிற்று.

## நம்பிள்ளை ஈடு

அவ:—நாலாம்பாட்டு. நானென்றது தான் முன்பு உம்மை எவ்வளவாக நினைத்தென்ன, இதிறே முன்பு என்னுடைய ஸ்திதியென்கிறார்.

வ்யா:—(நன்மையாலித்யாதி,) ஆத்மகுணோபேதராய் அறிவுடையாரில் ஆழ்வாரை யொழிந்தாரடையக் கைவிடும்படியன்றோ என்னுடைய ஸ்திதியிருக்கும்படி. நன்மை யென்கிறது குண தோஷாச்ரயமாயிருந்தால் தோஷாம்ஶத்தைக் கைவிட்டு குணாம்ஶத்தைக்கைக்கொள்ளுகை. அதில் மிகுகையாவது குணமென்று பேரிடலாவதொன்று மின்றிக்கே தோஷமேயாயிருந்தால் அதுதான் பற்றாசாகக்கைக்கொள்ளுகை.

(நான்மறையாளர்கள்) அதுக்கடியாக ஸஹார்த்தாநுஸந்தானம் பண்ணிப்போந்த வேதங்களிலே வாஸனைபண்ணியிருக்குமவர்கள்; நாலுவகைப்பட்ட வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள். அவர்களாகிறார் ஸ்ரீஜநகராஜன் திருமகளாராதல், கூரத்தாழ்வானாதல். (புன்மையாகக்கருதுவர்) புன்மையென்றொரு குணமாய், அதுக்காச்ரயமான தர்மியுமாயிருக்கையுமன்றிக்கே புன்மைதான் ஒருவடிவு கொண்டதென்றிருப்பர்கள். (ஆதலில்) அதுவே ஹேதுவாக.

(அன்னையாயத்தாய்) நாமல்லது இவ்வளவில் ரக்ஷகரில்லை யென்று எனக்கு ஸர்வவிதமான பந்துவானவர். 122 "स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः । त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः ॥" (ஸ பித்ரா ச பரித்யக்தஸ்ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணங்கத:॥) என்று புறம்பெங்கும் புக்கறுதே மீண்டுவந்த காகத்தோபாதி புறம்பு இவனுக்குப் பற்றில்லையென்று ஸர்வவித ரக்ஷகரானவர், ப்ரியமேசெய்யக்கடவ தாய் செய்வதும், ஹிதமே செய்யக்கடவ பிதாசெய்வதும், ஸ்வரூபாநுரூபமாக அடிமைகொள்ளும் நாயகன் செய்வதும் செய்யுமவர். /"தாயாய்த் தந்தையாயறியாதன அறிவித்தவத்தா" என்று பகவத்விஷயத்தில் அவர் சொல்லுமதை ஆழ்வார் விஷயத்திலே இவர்சொல்லுகிறார். (தன்மையான்) அக்நிக்கு ஔஷ்ண்யம் போலேயும் ஜலத்துக்கு ஶைத்யம் போலேயும் இஸ்வபாவத்தை நிரூபகமாகவுடையவர்.

(சடகோபனென்னம்பியே) தாய்செய்வது தமப்பன் செய்யமாட்டான். தமப்பன் செய்வது தாய்செய்யமாட்டாள். புறம்புள்ளார் செய்வது இருவரும் செய்யமாட்டார்கள். எல்லார் செய்யுமதும் செய்யவல்ல பூர்த்தியையுடையவர். ஆராய்ந்தால் அடியின்றிக்கே போட்கனுயிருக்கிற அபூர்ண விஷயங்களை ஆழ்வாருக்கு த்ருஷ்டாந்தமாகச் சொன்னவிடம் தப்பச்செய்தேன். இனிச்சொல்லலாவதொன்றுண்டு. என்னுடைய தன்மையாகிற பாழ்ந்தாறு நிரம்பும்படியான பூர்த்தியை உடையவரென்னுமித்தனை.

நாலாம்பாட்டுக்கு நம்பிள்ளைஈடு முற்றிற்று.

/ திருவாய் 2-3-2.

## ஐந்தாம் பாட்டு

5. நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்
கன்பனா யடியேன் சதிர்த்தேனின்றே.

பதவுரை:—அடியேன்—(இன்று 'அடியேன்' என்று சொல்லும்படியிருக்கும்) நான், முன் எலாம்—(ஆழ்வாருடைய விஷயீகாரம் பெறுவதற்கு) முன்பெல்லாம், பிறர் — அயலாருடைய, நல் பொருள் தன்னையும்—நல்லபொருள்களை, நம்பினேன்—ஆசைப்பட்டுக்கிடந்தேன்; (பிறர்) மடவாரையும்—பிறருடைய ஸ்த்ரீகளையும், நம்பினேன்—விரும்பிப்போந்தேன்; இன்று—இப்போதோவென்றால், செம்பொன் மாடம்—செவ்விய பொன்னால் சமைத்த மாடங்களையுடைய, திரு குருகூர் நம்பிக்கு—திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருக்கு, அன்பன் ஆய்-பக்தனாகப்பெற்று, சதிர்த்தேன்—சதிரையுடையேனானேன்.

## நஞ்ஜீயர் வ்யாக்யாநம்

அவ:—அஞ்சாம்பாட்டு. ஸத்துக்களும் கைவிடும்படி உம்முடைய பக்கல் குற்றமேதென்னில், அநாதிகாலம் பரதாரபரிக்ரஹம் பரத்ரவ்யாபஹாரம் பண்ணிப்போந்த இளிம்பனானேன். இன்று ஆழ்வாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே சதுரனானேனென்கிறார். இதுக்கு முன்புண்டான அநாத்மகுணங்களை அநுஸந்தித்து ஆழ்வாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே க்ருதக்ருத்யனானேனென்கிறார்.

வ்யா:— (நம்பினேன் பிறர் நன்பொருள்தன்னையும்) பகவதீயமான ஆத்மவஸ்துவை என்னதென்றிருந்தேன்; 140 "चोरेणात्मापहारिणा" (சோரேணாத்மாபஹாரிணா) என்கிறபடியே ஸர்வேச்வரனதான ஆத்மவஸ்துவை அபஹரித்தேன். பிறர் நன்பொருளென்றது - ஐக்யச்ருதிகளும் சொல்லச்செய்தே பேதம் ஜீவிக்கைக்காக. பொருளென்கிறது- விரோதிவ்யாவ்ருத்ததமான ஸ்வரூபம்.

(நம்பினேனித்யாதி) ஆத்மாபஹாரத்தாலே பலித்த பலம் சொல்லுகிறார்: பகவத்விஷயத்திலே 141 "महाविश्वासपूर्वकं" (மஹாவிச்

வாஸ பூர்வகம்) என்றிருக்குமிருப்பெல்லாம் ஸ்த்ரீகள் பக்கலிலேயே ஆகிறது. †"விரைக்குழல் மடவார்கலவியைவிடு" என்றும், §"சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது" என்றும் அபியுக்தரான என்னுசார்யர்கள் சொன்னவிஷயத்தைக்கிடீர் நான் அநாதிகாலம் விச்வஸித்துப் போந்தது. மடவாரென்கிற பஹுவசநத்தாலே ஒன்றில் பர்யாப்தமாகாமையாலே கண்டவிடமெங்கும் நுழையும்படி சொல்லுகிறது.

(செம்பொனித்யாதி) ஆழ்வார் திருவவதரிக்கையாலே அங்குள்ள தடங்க இவருக்கு ச்லாக்யமாயிருக்கிறபடி. இவ்வூரிலைச்வர்யத்துக்கடியான பூர்த்தியையுடைய ஆழ்வார் ந்ர்ஹேதுக கடாக்ஷத்தாலே தம்பக்கலிலே பக்தியையுண்டாக்கினபடி. /"வரவாறென்றில்லையால் வாழ்வினிதால்" என்கிறபடியே வந்தவழி அறிந்திலேன். இங்ஙனே பலிக்கக்கண்டவித்தனை. அபூர்ணமான பகவத்விஷயத்திலே அடியனுமவனுகாதே, பூர்ணரான ஆழ்வாருக்கு அடியேனுய் சதுரனுனேனென்கிறுர். ஸ்த்ரீகளை விச்வஸித்து இளிம்பனுன நான் ஆழ்வாரைப்பற்றி இன்று சதுரனுனேனென்றுமாம்

அஞ்சாம்பாட்டுக்கு நஞ்சீயர் வ்யாக்யானம் முற்றிற்று.

## நம்பிள்ளை ஈடு

அவ:— அஞ்சாம்பாட்டு. (நம்பினேனித்யாதி) உம்மைப் புன்மையாகவும், உமக்கு ஆழ்வார் ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகராகவும் சொன்னீர். உம்முடைய பூர்வவ்ருத்தத்தையும் அவர் உமக்கு உபகரித்த எல்லையையும் சொல்லிக்காணீரென்னச் சொல்லுகிறுர்.

வ்யா:—(நம்பினேனித்யாதி) இது என்னுடைய புன்மையிருந்தபடி. பிறர்பொருளை நம்பினேன். இப்போது பொருளென்கிறது— அர்த்தத்தை. அதாவது—ஆத்மவஸ்து. எங்ஙனேயென்னில். 142 "द्रव्यं गुणस्तथा कर्म जातिश्चेतस्तदाश्रयः" (த்ரவ்யம் குணஸ்ததா கர்ம ஜாதிச்சேதஸ்ததாச்ரய:) என்று பதார்த்தம் சொல்லுகிறவிடத்தே த்ரவ்யங்களில் ப்ரதாநமாக ஆத்ம

† பெரி-திரு 9-8-1. § திருவாய் 2-10-2. / பெரிய-திருவ-54.

வஸ்துவை நிச்சயித்ததிறே. அத்தையிறே இவர் முன்பு அபஹரித்ததென்கிறது. / "கள்வனேனானேன்" என்றும் † "வன் கள்வன்" என்றும் சொல்லுகிறபடிகளை இவரும் சொல்லுகிறார். பகவச்சேஷத்வத்தளவிலும் நில்லாதே ஆழ்வாராளவும் வரும்படியான ஆத்மவஸ்துவைக்கிறே தான் அபஹரித்தது. ஆழ்வாராளவும் வந்தவன்றிறே இது அநந்யார்ஹமாய்த்தாவது.

பிறரனைநு—ஒருவிஷயத்தை விவக்ஷிக்கிறது. த்ரவ்யத்தினுடைய ச்லாக்யதைக்கும் உடையவனுடைய ச்லாக்யதைக்கும் தக்கபடி கனத்திறே ப்ராயச்சித்தமிருப்பது. ப்ராஹ்மணனுடைய த்ரவ்யத்தை அபஹரித்தாப்போலன்றிறே சண்டாளனுடைய த்ரவ்யத்தை அபஹரித்தால ப்ராயச்சித்தமிருப்பது. த்ரவ்யங்களிலும் இப்படியே குருலகு ஸ்வபாவமிருக்கும்படி. ஆத்மவஸ்து கௌஸ்துபஸ்தாநீயமாய், இத்தையுடையவன் ஸர்வேச்வரனாயிறே இருப்பது.

(நம்பினேன் மடவாரையும்) ரத்நாபஹாரம்பண்ண அஞ்சாதவன் இறகும் வைக்கோலும் களவுகாணவஞ்சுமோ? ஈச்வரன் என்னதென்றபிமானித்த வஸ்துவை அபஹரித்தவன் தேஹபரிக்ரஹம் பண்ணினார் என்னதென்றபிமானித்த வஸ்துவை அபஹரிக்கச் சொல்லவேணுமோ? (முன்னெல்லாம்) இப்படி ஆத்மாபிமானம் பண்ணியும் விஷயப்ரவணனாயும் போந்தகாலம் ஸாவதியாகப் பெற்றதாகிலும் லாபமுண்டிறே. ஈச்வரனோபாதி ஆத்மவஸ்துவும் நித்யம், காலமும் அநாதியாகையாலே முன்புள்ள காலமெல்லாமென்றபடி.

உம்முடைய தன்மை குறைவற்றிருந்தது. ஆழ்வார் உமக்கு நிர்ஹேதுகமாக உபகரித்ததேதென்னச் சொல்லுகிறார் (செம்பொன்மாடவித்யாதி). இப்படி அநாதிகாலம் ஆத்மாபஹாரம் பண்ணியதும், விஷயப்ரவணனானதும் இழவுக்கு உடலாகை யன்றிக்கே ஸுரண்யப்ரபாவத்தாலே பேற்றுக்கு உடலாக க்ருஷி பண்ணினானைப்போலே பலித்துக்கொண்டு நிற்கக்கண்டேன். (செம்பொன் மாடத்திருக்குடந்தை நகர் நம்பிக்கு) ஆத்மாபஹாரம் பண்ணியும்


/ பெரிய-திரு 1-1-5.   † திருவாய் 5-1-4.

அந்யபரனாய்ப்போந்தானென்றும் என்னுடைய பூர்வவ்ருத்தத்தை யாராய அத்தனையபூர்ணரோ ஆழ்வார்?

(இன்று அன்பனாய்) என்னதென்றிருக்கைதவிர்ந்து அவனுக் கென்றிசைந்து இதரவிஷயத்திலே ஸ்நேஹத்தைவிட்டு பகவச் சேஷத்வத்தளவிலும் நில்லாதே அதினெல்லையான ததீயசேஷத் வத்தினளவிலே நின்றார் ஆழ்வார். இந்த ப்ரதிபத்திக்ரமம் வேண் டாதே எனக்கு முதலடியிலே இதெல்லா முண்டாய்த்தென்கிறார்.

(அடியேன் சதிர்த்தேன்) முன்பு தேஹாத்மாபிமானம் பண்ணிப் போந்தநாளிறே நானென்பது. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபின்பு அடியேனென்றாய்த்து இவருடைய அஹமர்த்த ப்ரதிபத்தியிருப்பது. (சதிர்த்தேன்) ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவை என்னதென் றிருக்கைக்கும் இதரவிஷய ப்ரவணனாகைக்கும் மேற்பட சதிர்க் கேடில்லையிறே. அவற்றைவிட்டு பகவச்சேஷத்வத்தளவிலும் நில் லாதே ஆழ்வாரளவும் வருமவனாம்படியான சதிரையுடையவ னானேன். ஆசார்யர்களை நம்பி என்கைக்கும், அவர்களழைத்தால் அடியேனென்கைக்கும் ஹேது ஸ்ரீமதுரகவிகள் வாஸநையாய்த்து.

அஞ்சாம்பாட்டின் நம்பிள்ளையீடு முற்றிற்று.



### ஆறும்பாட்டு

6. இன்றுதொட்டு மெழுமையு மெம்பிரான்
நின்றுதன் புகழேத்த வருளினன்
குன்றமாடத்திருக் குருகூர்நம்பி
என்றுமென்னையிகழ்விலன் காண்மினே.

பதவுரை:—இன்று தொட்டும்—இன்றுமுதலாக, எழுமையும்—மேலுள்ள காலமெல்லாம், நின்று—(நான்) அத்யவஸாயம் குலைக்கப்பெற்று, தன் புகழ்—தம்முடைய [ஆழ்வாருடைய] திருப்புகழ்களை, ஏத்த—துதிக்கும்படி, எம் பிரான் அருளினன்—எம் ஸ்வாமியான ஆழ்வார் க்ருபைபண்ணினார்; குன்றம் மாடம்—மலைபோன்ற மாடங்களையுடைய, திரு குருகூர் நம்பி—திருநகரிக்குத் தலைவரான அவ்வாழ்வார், என்றும்-(இனி) எக்காலத்திலும், என்னை—என் விஷயத்தில், இகழ்வு இலன்—அநாதரமுடையவராக இருக்கமாட்டார்; காண்மின்—(இதனை அநுபவத்தில்) கண்டுகொள்ளுங்கள்.

---

## நஞ்ஜீயர் வ்யாக்யாநம்

அவ:—ஆறும்பாட்டு. (இன்றுதொட்டுமித்யாதி) நீர் க்ருதக்ருத்யரானபடி எங்ஙனேயென்னில், †"வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன்" என்கிறபடியே காலதத்வமுள்ளதனையும் ஆழ்வார் தம்மையே ஏத்தும்படி பண்ணினாரென்கிறார்.

வ்யா:—(இன்று தொட்டும்) பகவத்விஷயத்திற்காட்டில் தத்ஸம்பந்தியான ஆழ்வார் உத்தேச்யரென்று ருசிபிறந்த இன்றுதொடங்கி, (எழுமையு மெம்பிரான்) *காலவிச்சேதமின்றிக்கே எனக்கு உபகாரகரான ஆழ்வார். போனகாலமும் எனக்கு ருச்யபாவத்தாலே இழந்தேனித்தனை. (நின்று) ப்ராப்யத்தில் ப்ரதமாவதியாகிலிறே கமநப்ரஸங்கமுள்ளது. எல்லை நிலத்திலே புக்கார் நிலைநிற்குமித்தனையிறே. §"மானிடம்பாடவந்த கவியேனல்லேன்" என்று ஆழ்வாருக்கு வ்யாவர்த்யவிஷயம் மநுஷ்யரிறே. இவர்க்கு வ்யாவர்த்யம் எம்பெருமானென்படி.

(குன்றமாடத் திருக்குருகூர்நம்பி) பர்வதங்கள் போலேயிருந்துள்ள மாடங்களையுடைய திருக்குருகூரில் நிரபேக்ஷரான ஆழ்வார்; ஆழ்வார்

† திருவாய் 4·5·3. § திருவாய் 3·9·9.

பூர்த்திஎல்லை காணவொண்ணாதாப்போலே மாடங்களினுயர்த்தி எல்லை காணவொண்ணாதபடி. (என்றுமென்னையித்யாதி) தாம் ஸ்தோத்ரம் பண்ணுகைக்கு ஹேது சொல்லுகிறார். ஆழ்வார் ஸந்நிதிபோலே காணும் இவரைப் பேசுவிக்கிறது. உங்களைப்போலே பகவத்விஷயத்திலன்றி நான் ஆழ்வார் கவியானபடி காணமாட்டிகோளோ?.

ஆறும்பாட்டின் நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

★ ★ ★

# நம்பிள்ளை ஈடு

அவ:—(இன்றுதொட்டுமித்யாதி) ஆழ்வார் இப்போது இங்ஙனே விஷயீகரித்தாராகிலும் நீர் தாம் அநாதிகாலம் புறம்பே அகப்பாராய்ப் போந்தேனென்றீர்; இன்னமும் அப்படிப்புறம்பே போகிலோவென்ன; அங்ஙனே போகலாம்படியோ ஆழ்வாரருளி யிருப்பதென்கிறார்.

வ்யா:—(இன்றுதொட்டும்) மேலொருகாலிலே பலிப்பதாக விட்டு வைக்கிறாரோ? விஷயீகரித்த இன்றுதொடங்கி; (எழுமையும்) ஏழுஜந்மமென்கிறது உபலக்ஷணம்; மேலுள்ள காலமெல்லா மென்றபடி. (எம்பிரான்) †"பிரான் பெருநிலங்கீண்டவன்" என்று பகவத்விஷயத்திலே ஆழ்வார் சொல்லுமத்தை உபகார ஸ்ம்ருதி யாலே அவர்விஷயத்திலே சொல்லுகிறார்.


(நின்றுதன் புகழேத்தவருளினான்) உபகார ஸ்ம்ருதியாலே பகவல்லாபத்தளவும் இவரைப்பற்றி நின்று, பின்னை அதுகிட்டின வாறே அதிலே தோள்மாறும்படியன்றியே, தம்முடைய அநு பவத்துக்குள்ளே பகவதநுபவமாம்படியன்றோ ஆழ்வார் எனக் கருளிற்று. (தன்புகழேத்த) ஆழ்வார் தமக்கு உபகரித்த பகவத் விஷயத்தையொழியப் புறம்பே போனாராகிலிறே இவர்தம்மை ஏத்தினான்றிக்கே ஒழிவது.

(குன்றமாடத் திருக்குருகூர்நம்பி) ஆழ்வார் தம்மையுமேத்தி இன்னமுமொரு விஷயத்தை ஏத்தவேண்டும்படியோ ஆழ்வா

† திருவாய் 1-7-6.

ருடைய பூர்த்தியிருப்பது? (குன்றமாடத் திருக்குருகூர்) /"குன்றம்போல் மணிமாடநீடு திருக்குருகூர்" என்று ஆழ்வாரருளிச்செய்யுமதுவே இவர் நெஞ்சில் வாஸிதமாயிருப்பது; அது தன்னையே சொல்லுமத்தனையிறே. (என்றுமென்னை இகழ்விலன் காண்மினோ) யாவதாத்மபாவி புறம்பொன்றில் போகாதபடியன்றோ என்னை விஷயீகரித்தது. என் தன்மைபாராதே என்னை விஷயீகரித்தவர் நான் புறம்பேபோவேனென்றால் போகலாம்படி என் வசம் என்னைக்காட்டித்தருவரோ?

ஆறாம்பாட்டின் நம்பிள்ளை ஈடு முற்றிற்று.



/ திருவாய் 4-10-1.

ஏழாம்பாட்டு

7. கண்டு கொண்டென்னைக் காரிமாறப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினான்
எண்டிசையு மறிய வியம்புகேன்
ஒண்டமிழ்ச் சடகோப னருளையே.

பதவுரை:—பிரான்—பரமோபகாரகராய், காரி மாறன்—பொற்காரியார் திருக்குமாரரான நம்மாழ்வார், என்னை-(தமது பெருமை அறியாத) என்னை, கண்டு—கடாக்ஷித்து, கொண்டு—கைக்கொண்டு பண்டைவல்வினை — அநாதியாய்ப் ப்ரபலமாயிருந்த பாபங்களை, பாற்றி அருளினான்—அழிந்து போம்படி போக்கடித் தருளினார்; (ஆதலால்) ஒண் தமிழ் சடகோபன் அருளையே—அழகிய தமிழ்க் கவிகளுக்கு இருப்பிடமான அவ்வாழ்வாருடைய அருளையே, எண் திசையும்—எட்டுத்திக்கிலுள்ளவர்களும், அறிய—அறியும்படி, இயம்புகேன்—சொல்லக்கடவேன்.

## நஞ்ஜீயர் வ்யாக்யாநம்

அவ:—ஏழாம்பாட்டு. என்னுடைய ஸகலப்ரதிபந்தகங்களையும் போக்கின ஆழ்வாருடைய நிர்ஹேதுகவிஷயீகாரத்தை ஸப்ரஸித்தமாக்குவேனென்கிறார்.

வ்யா—(கண்டுகொண்டென்னை) § "இருந்தான் கண்டு கொண்டு" என்று எம்பெருமான் ஆழ்வாரைக்கண்டு கொண்டிருந்தாப்போலே ஆழ்வாருக்கு அலப்யலாபமாகிறபடி; காட்சி இத்தலைக்காகவன்றிக்கே தம்பேறாக விருக்கிறபடி. (காரிமாறப்பிரான்) ஆழ்வார் ¶ "பிரான் பெருநிலங் கீண்டவன்" என்னுமாபோலே இவரும் காரிமாறப்பிரானென்கிறார்.

(பண்டைவல்வினைபாற்றியருளினான்) / ப்ரவாஹமநாதியாகையாலே அடிகாணவல்லாரில்லை; அந்தவத்தாகையாலே அடியுண்டென்று அநுமிக்குமித்தனையிறே; 'ப்ராயச்சித்த விநாச்யமன்றுகர்மம், அநுபவவிநாச்யம்' என்கிற ப்ரமாணத்துக்கும் அவ்வருகாய்க்காணுமிருப்பது; கரியகோலத் திருவுருக் காண்பனென்னு மத்தையும் தவிர்ப்பித்தாப்போலே காணும் ஆழ்வார்; உத்தேச்ய விரோதி பாபமாமித்தனையிறே; "மதிநலமருளினன்"

§ திருவாய் 8-7-2. ¶ திருவாய் 1-7-6. / (பா) ஸாரஸாரம்.

என்று தலைசிப்த்தார் ஆழ்வார்; இவரும் தமக்கு உபகரித்தபடத்தை அருளிச்செய்கிறார்.

(எண்டிசையுமறிய வியம்புகேன்) விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற எல்லாருமறியச் சொல்லுகிறேன். இவ்வுபகாரம் நிரவதிக மானாப்போலே திக்குக்களும் நிரவதிகமாகப்பெற்றிலோம்; இது என்னளவிலே பர்யவஸிப்பதே யென்கிறார்.

(ஒண்டமிழ்) ஒள்ளியதமிழ். பெரிய ஆழத்தில் உள்ளுக்கிடந்த பதார்த்தங்களெல்லாம் தரையிலே காணுமாபோலே அதிகாராதிகாரமாய் அவகாஹிக்கவொண்ணாதே, 163 "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்னும் விஷயத்தை ஸர்வாதிகாரமாக்குகையாலே ஒண்டமிழென்கிறது.

(சடகோபனருளையே) மயர்வறமதிநல மருளினதுக்கு மகப்படாத என்னையும் ஆழ்வாரங்கீகரித்த அருளைக்கிடீர் சொல்லுகிறது.

ஏழாம்பாட்டின் நஞ்சீயர் வ்யாக்யானம் முற்றிற்று.

## நம்பிள்ளை ஈடு

அவ:—ஏழாம்பாட்டு. ஆழ்வார் தம்பக்கல் நிர்ஹேதுகமாக விஷயீகரித்த விஷயீகாரத்தைக்கண்டு இத்தை நாட்டாரறியாதே அநர்த்தப்படுகிறபடியைப் பார்த்து இத்தை எல்லாருமறியும்படி கூப்பிடுவேனென்கிறார்.

வ்யா:—(கண்டுகொண்டு) கிட்டினவாறே தம்மைப்பெறுகைக்கு எதிர்சூழல்புக்குத் திரிந்தாரிவரென்று தோற்றியிருந்து, (என்னை) இந்த நிர்ஹேதுகவிஷயீகாரத்தை ப்ரதிபத்திபண்ணவும் மாட்டாதே யிருக்கிறவென்னை. (காரிமாறப்பிரான்) உபகாரஸ்ம்ருதியாலே பிரானென்கிறார்; காரிமாறனென்கிற விசேஷணத்தாலே ஆழ்வாருக்கு உபகாரகனை ஈச்வரனளவிலே போகாமைக்காகச் சொல்லுகிறார்.

(பண்டைவல்வினை) அநாதிகாலம் ஸஞ்சிதமான இதரவிஷய ப்ராவண்ய ஹேதுவான பாபம், ஶூர்ப்பணகியைப்போலே வழியல்லாவழியே பற்றுகைக்கீடான ருசி, ப்ரதமாவதியான பகவத்விஷயத்தளவிலே பிறந்த புருஷார்த்தபுத்தி- இவையடங்கலும். (வல்வினை) ப்ராயச்சித்த ஸாத்யமுமன்றிக்கே அநுபவவிநாச்யமுமன்றிக்கேயிருக்கை. (பாற்றியருளினன்) 164 "द्विषन्तः पापकृत्यां" (த்விஷந்த: பாபக்ருத்யாம்) என்கிறபடியுமன்றிக்கே உருமாய்ந்துபோம்படி பண்ணினான்.

(எண்டிசையுமறியவியம்புகேன்) விஶேஷஜ்ஞரோடு அவிஶேஷஜ்ஞரோடு வாசியற ருசியுடையாரெல்லாரும் அறியும்படி சொல்லுகிறேன். § "தொண்டரெல்லீரும்வாரீர்" என்னுமாழ்வாரோட்டை வாஸனையாலே சொல்லுகிறார்.

(ஒண்டமிழ்ச்சடகோபனருளையே) மயர்வறமதிநல மருளின அருள்போலன்று இவருடையவருள். அவ்வருளுக்குங்கூடத் தப்பின எனக்கருளினவருளிறே. (ஒண்டமிழ்) ஒள்ளிய தமிழ்.

ஏழாம்பாட்டின் நம்பிள்ளையீடு முற்றிற்று.



§ திருவாய் 5-2-2.

எட்டாம்பாட்டு

8. அருள்கொண்டாடு மடியவரின்புற
அருளினானவ் வருமறையின்பொருள்
அருள்கொண்டாயிர மின்தமிழ்ப்பாடினான்
அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே.

பதவுரை:— அருள் கொண்டாடும்—பகவத் க்ருபையைக் கொண்டாடுகின்ற, அடியவர்—பக்தர்கள், இன்புற—ஆநந்திக்கும்படி, அ அரு மறையின் பொருள்—அந்த அருமையான வேதத்தின் உட்பொருள்களை, அருளினான்- அருளிச்செய்தவராயும், அருள் கொண்டு- பரமக்ருபையாலே, இன் தமிழ்—இனிய தமிழ்ப்பாஷையிலே அமைந்த, ஆயிரம்—திருவாய்மொழியாயிரத்தை, பாடினான்— அருள் கண்டீர்—க்ருபை ஒன்றுமாத்திரமன்றோ, இ உலகினில்— இந்த லோகத்திலே, மிக்கது—பெரியதாயிருக்கிறது.

## நஞ்ஜீயர் வ்யாக்யானம்

அவ:—எட்டாம்பாட்டு. வேதரஹஸ்யத்தை வெளியிட்ட ஸர்வேச்வரன் க்ருபையைக்காட்டில் திருவாய்மொழியை அருளிச்செய்த ஆழ்வாருடைய க்ருபை ஜகத்துக்கு மிக்கதென்கிறார்.

வ்யா:—(அருளித்யாதி). சேஷபூதனுக்கு ஆநந்திக்கையே ஸ்வரூபம்; சேஷபூதராகையும் ஹ்ருஷ்டராகையும் வேறில்லை காணும்; இவனருளை அநுஸந்தித்து, 169"ஹ்ருஷ்டா:" (ஹ்ருஷ்டா:)என்கிறபடியே ஹ்ருஷ்டராமித்தனை.

(அருளினான் அவ்வருமறையின்பொருள்) பரமரஹஸ்யமான வேதார்த்தத்தை நிர்ஹேதுகமாகத் தன்பக்கலாசாலேசமுடையார் வாழும்படி கீதோபநிஷதாசார்யனாய் நின்று வெளியிட்டான். வேதங்கள் மறைத்த அர்த்தத்தை திரோதாத்தனுகையாலே ப்ரகாசிப்பித்தான்.

(அருள்கொண்டாயிர மின்தமிழ்பாடினான்) ஆழ்வாருக்குத் திருவாய்மொழிக்குள்ளுரைபோலே காணுமருளிச்செய்தது. இருவருக்கும் முழுநோக்காகப் பெற்றால் ஆழ்வாருக்குச் செய்யப்போகாததில்லையாகாதே. வேதாதிகாரிகளுக்கு உஜ்ஜீவநமாம்படி எம்பெருமான்செய்தது; அநதிகாரிகளும் க்ருதார்த்தராம்படியிறே ஆழ்வாருளிச்செய்தது.

(அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கதே) எம்பெருமானருளினது ப்ராதேசிகம்; ஆழ்வாரருள் ஸார்வத்ரிகம்; §"பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும், ¶"தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்றுமிறே சொல்லிற்று.

எட்டாம்பாட்டின் நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

§ திருவாய் 1-5-11. ¶ திருவாய் 9-4-9.

நம்பிள்ளை ஈடு

அவ:—எட்டாம்பாட்டு. "எண்டிசையுமறிய இயம்புகேன்" என்கைக்கடி - ஆழ்வாருடைய அருள் கொண்டாடுமருள் சிதசிதீச்வரதத்வத்ரயங்களையும் கபளீகரித்திருக்கையாலென்கிறார்.

வ்யா:—(அருள்கொண்டாடுமடியவர்) இவ்வாழ்வார் தம்மைப் போலேயிருக்குமவர்கள்; †"அதுவுமவனதின்னருள்" என்றும் ‡"அருள்பெறுவாரடியார்" என்றும் இங்ஙனேயிறே இவர் தாமுமருளிச்செய்வது; அப்படியிருக்குமவர்கள். (இன்புற) ||"எண்ணுதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்ப" என்கிறபடியே ஆநந்திநிர்ப்பாராக. (அருளினனவ்வருமறையின் பொருள்) ப்ரமாண ப்ராவல்யத்தைச் சொல்லுகிறது. (அருமறை) அவன்றன்னைப்பெறிலும் பெறுதற்கரிதாயிருக்கை. 170 "सा हि श्रीरमृता सतां" (ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்) என்கிறபடியே வேதார்த்தத்தை அருளிச்செய்தார்.

(அருள்கொண்டு) இவர்தாம் கைவந்தபடி பாடினாரல்லர். §"மயர்வற மதிநல மருளினன்" என்கிறபடியே, பகவத் ப்ரஸாதத்தை முதலாகக்கொண்டாய்த்து இவர் கவிபாடிற்று, இவர்தாம் கவிபாடாநிற்கச் செய்தே ‡"என்னுள்ளியே தப்புதலின்றித் தன்னைக் கவி தான்சொல்லி" என்கிறபடியே பிறரோபாதி தாமும் விஸ்மயப்படும்படி நிரவத்யமாகவிறே கவிபாடுவித்துக் கொண்டபடி. (ஆயிரமின்தமிழ்ப்பாடினன்) 171 "चतुर्विंशस्सहस्राणि श्लोकानामुक्तवानृषिः" (சதுர்விம்ஶஸ்ஸஹஸ்ராணி ச்லோகாநாமுக்தவாந் ருஷி:) என்றாப் போலே ஆயிரமாகவாயிற்றுப் பாடிற்று.

(இன்தமிழ்ப்பாடினன்)172 "पाठ्ये गेये च मधुरं" (பாட்யே கேயே ச மதுரம்) என்கிறபடியே இனிதாய் துரவகாஹமான அர்த்தத்தைச் சொல்லாநிற்கச் செய்தேயும், ஶப்தம் அதிக்ருதாதிகாரமின்றிக்கே ஸர்வாதிகாரமாம்படியும் பாடினார்.

(பாடினனருள்கண்டீர்) மயர்வற மதிநல மருளினவருள் போலன்றிக்கே அதுதன்னை விளாக்குலைகொண்டாய்த்திருப்பது. (இவ்வுலகினில் மிக்கதே) சிதசிதீச்வரதத்வத்ரயங்களையும் கபளீகரித்திருக்கை.

எட்டாம்பாட்டின் நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

---

குறியிட்ட பாசுரங்களை முகரங்களுக்கடுத்த வ்யாக்யானத்தில் காண்க.

### ஒன்பதாம் பாட்டு

மிக்கவேதியர் வேதத்தினுட் பொருள்
நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்
தக்கசீர்ச் சடகோபனென்னம்பிக்காள்
புக்க காதலடிமைப் பயனன்றே.

பதவுரை—மிக்க வேதியர் வேதத்தின்—சிறந்த வைதிகர்களால் ஓதப்படுகின்ற வேதத்தினுடைய, உள் பொருள்— உள்ளுறை பொருளானது, நிற்க—நிலைநிற்கும்படி, பாடி—திருவாய் மொழியைப் பாடி, என் நெஞ்சுள் — என்னுடைய ஹ்ருதயத்திலே, நிறுத்தினான்—(அந்த வேதார்த்தங்களை அல்லது திருவாய்மொழியை) ஸுப்ரதிஷ்டிதமாக்கி யருளினார் (ஆழ்வார்); தக்கசீர்—தகுதியான குணங்களையுடையராய்,சடகோபன்-சடகோபனென்ற திருநாமத்தை யுடையரான, என் நம்பிக்கு— (அந்த) ஆழ்வார் விஷயத்திலே, ஆள் புக்க- அடிமை செய்வதற்கு உறுப்பான, காதல்—ஆசையானது, அன்றே— அந்த க்ஷணத்திலேயே, அடிமைப்பயன்—(ஆழ்வார் திருவடிகளில்) கைங்கரியம் செய்வதையே பயனாகவுடைத்தாய்த்து.

---

## நஞ்சீயர் வ்யாக்யாநம்

அவ:—ஒன்பதாம்பாட்டு. ஸகல வேததாத்பர்யமான பாகவத சேஷத்வத்தை §"பயிலும்சுடரொளி" /"நெடுமாற்கடிமை" என்கிற இரண்டு திருவாய்மொழிகளிலும் அருளிச்செய்து என்நெஞ்சினுள்ளே நிறுத்தினானென்கிறார்.

வ்யா:—(மிக்கவேதியர்) எம்பெருமான் பக்கலிலே ஜ்ஞானபக்திகளைப் பூர்ணமாகவுடைய வைதிகர்; 103 " यत्र पूर्वे साध्याः सन्ति देवाः " (யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:) என்கிறபடியே. (வேதத்தினுட் பொருள்) வேதத்துக்கு ப்ராணனான ப்ரமேயம் திருவாய்மொழி. திருவாய்மொழிக்கு ப்ரமேயம் பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமை. (நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்) பண்ணோடும் இசையோடும் பாடி என்நெஞ்சிலே ப்ரதிஷ்டிப்பித்தான். கல்லைக்குழித்து நீரை நிறுத்துவாரைப்போலே ஸ்திரீர்செய்தது.

---

§ திருவாய் 3-7. / திருவாய் 8-10.

(தக்கசீரித்யாதி) எல்லாமேன்மையும் சொன்னாலும் தகுதியான ஆழ்வார். எல்லாம் சொன்னாலும் அங்குத்தை ப்ரபாவத்தை எல்லைகாணவொண்ணாதபடியிறே ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. (ஆள்புக்க காதலடிமைப்பயனன்றே) இவர் திருவடிகளிலுண்டான பக்தியன்றோ இவருக்கு அடியேனிதிலுண்டான ப்ரயோஜநம்.

எட்டாம்பாட்டின் நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

# நம்பிள்ளை ஈடு

அவ:—ஒன்பதாம்பாட்டு. (மிக்கவேதியரித்யாதி). உபக்காரினவருக்கு அவதியேதென்ன, என்னுடைய தண்மைபாராதே ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை எனக்கு உபகரித்தானென்று, /"நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே" என்று ஆழ்வாரருளிச்செய்தாப்போலே இவரும் உபகாரஸ்ம்ருதியாலே ஆழ்வார் திருவடிகளிலே அருளிச்செய்கிறார்.

வ்யா—(மிக்கவேதியர்) ப்ரமாணச்ரேஷ்டமான வேதத்தையே நிரூபகமாகவுடையவர்கள். அநேகமுகாரத்யயநம் பண்ணினவர்களென்னவுமாம். (வேதத்தினுட்பொருள்) வேதத்தினுடைய பொருள். ஸகல வேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை.

(நிற்கப்பாடி) ப்ரதிபத்திபண்ணவரிதாயிருக்கிற வேத ரஹஸ்யார்த்தத்தைக் கேட்டார்க்கு ப்ரதிபத்திவிஷயமாம்படி பாடி. (என்னெஞ்சுள் நிறுத்தினான்) மலையைக்குழித்து அதிலே நீரை நிறுத்துவாரைப்போலே நிஸ்ஸாரமான என்னெஞ்சுக்கு இதுவே விஷயமாம்படி பண்ணினார்.

(தக்க சீர்ச்சடகோபன்) ஸர்வேச்வரன் கவிகளென்றால் தகுதியான கல்யாணகுணங்களையுடைய ஆழ்வார். §"அயர்வறும் அமரர்களதிபதி" என்றால் போரும்படி ஸர்வேச்வரனிருக்குமாபோலே ஸர்வேச்வரன் கவிகளென்றால் தகுதியாயாய்த்து ஆழ்வாரிருப்பது. †"ஏற்கும் பெரும்புகழ்வானவரீசன் கண்ணன்றனக்கு ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்" என்றுதாமே அருளிச்செய்தாரிறே.

/ திருவாய் 3-3-4. § திருவாய் 1-1-1. † திருவாய் 3-9-11.

(என் நம்பிக்கு) என்னை விஷயீகரிக்கைக்குத் தகுதியான பௌஷ்கல்யத்தை உடையவர்க்கு. (ஆள்புக்காதல்) அடிமையாக வேணுமென்று எனக்குப்பிறந்த ருசி. (அடிமைப்பயனன்றே) அடிமையாகிற ப்ரயோஜநத்தோடே வ்யாப்தமாயிருக்கும்.

பகவத்விஷயத்தில் ருசி - இவர்க்கு ஶரீரவிச்லேஷம் பிறந்தால் அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒரு தேஶவிஶேஷத்திலே சென்றால் பெறக்கடவதாயிறே யிருப்பது. ஆழ்வார் விஷயத்தில் பிறந்த ருசி-அங்ஙனன்றிக்கே இச்ஶரீரத்தோடே ஆழ்வார் திருவடிகளிலே எல்லாவடிமைகளும் செய்யலாம்படி பண்ணும். / "துயரறு சுடரடி தொழுதெழு" என்று முதலிலே அபிநிவேஶித்த ஆழ்வாருக்கு *முனியே நான்முகனுக் கவ்வருகேயிறே பேறுய்த்தது. இவ்விஷயத்தில் ருசிபிறந்தால் அத்தனை விளம்பமில்லை யென்கிறது. அன்றே யென்றது - ஆமே யென்றபடி; "அன்றெனக்கிளவியா மெனத்தகுமே."

ஒன்பதாம் பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று

பத்தாம்பாட்டு

10. பயனன்றாகிலும் பாங்கலராகிலும்
செயல்நன்றாகத் திருத்திப்பணிகொள்வான்
குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே

பதவுரை:—பயன் அன்று ஆகிலும்—(பிறர் திருந்துவதால்) தமக்கொரு பயனில்லாமற் போனாலும், பாங்கு அலர் ஆகிலும்—(அவர்கள் திருந்துகைக்குப்) பாங்காக அமையாமற் போனாலும், செயல்—தமது செய்கையாலே, நன்றாக திருத்தி—நன்றாக சிக்ஷித்து, பணிகொள்வான்—(அவர்களை) ஆட்கொள்ளுமவராய், குயில் நின்று ஆல் பொழில் சூழ் குருகூர்—குயில்களானவை நின்று ஆரவாரஞ் செய்யப்பெற்ற சோலைகளாலே சூழப்பட்ட திருநகரியிலே (எழுந்தருளியிருக்கிற) நம்பி!—ஆழ்வாரே! உன் தன்—தேவரீருடைய, மொய் கழற்கு—சிறந்த திருவடிகளில், அன்பையே—அன்பு உண்டாவதைக் குறித்தே, முயல்கின்றேன்—முயற்சி செய்கின்றேன்.

## நஞ்ஜீயர் வ்யாக்யாநம்

அவ:—பத்தாம்பாட்டு. பயிர்கள் எறிமறியக்கடவதிறே. அப்படியே ஆழ்வார் பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்கையாலே தாம்பண்ணினபக்தி ஒன்றுமில்லையாய்த்தோற்றி தேவரீர் திருவடிகளிலே இப்போதிறே நான் ஸ்நேஹிக்கத் தொடங்கினேனென்கிறார்.

வ்யா:—(பயனன்றாகிலுமித்யாதி) அநுத்தேச்யரேயாகிலும் அபவ்யரேயாகிலும், எம்பெருமானன்றே அநாச்ரிதரென்று கைவிடுகைக்கும், அவிதேயரென்று நிரஸிக்கைக்கும். (செயல்நன்றாக) நின்றநிலையிலே துர்வ்ருத்தரையும் ஸுவ்ருத்தராக்கிக் கொள்ளுவார் ஆழ்வாரன்றோ. பகவத்விஷயம்போலே அதிகாரம்பார்த்துப் புகுகையன்றியே நின்றநிலையிலே புகுரலாம்படியிறே ஆழ்வாருடைய நீர்மையிருப்பது.

(குயிலித்யாதி) நின்றநிலையிலே கிட்டலாமென்கைக்கு நிதர்சநம் சொல்லுகிறது. இவரை அவகாஹித்த திர்யக்குகளும் களித்து வர்த்திக்கும்படி இவரைக் கிட்டினார்க்குமுண்டோ குறையும். 111 "एतत्साम गायन्नास्ते" (ஏதத்ஸாம காயந்நாஸ்தே) என்கை பகவத்விஷயத்துக்காகிலிறே

ஒரு தேசவிசேஷத்தேறப்போக வேண்டுவது; ஏற்றமுள்ள விஷயத்தைப் பற்றினார்க்கு இங்கே கிடைக்கும்போலேகாணும். முக்தர்க்கிறே அங்குப் போகவேண்டுவது. முமுக்ஷுக்களுக்குக் கிடைக்குமிடமிறே இவ்விடம். எம்பெருமானோடு நித்யரோடு முக்தரோடு வாசியற த்ருஷ்டராம்படியிறே ஆழ்வாருடைய பூர்த்தி.

(முயல்கின்றேனித்யாதி) உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே ஸ்நேஹத்தைப் பண்ணுகைக்கு உத்ஸாஹியாநின்றேன். பணிகொள்வானென்னப்புகில் பணிகொள்வானை குருகூர்நம்பி என்னுதல் பணிகொள்ளுகைக்காக முயல்கின்றேனென்னுதல்.

பத்தாம்பாட்டுக்கு நஞ்சியர் வ்யாக்யாநம் முற்றிற்று.

## நம்பிள்ளை ஈடு

அவ:—பத்தாம்பாட்டு. (பயனன்றாகிலுமித்யாதி) ஆழ்வார் தமக்கு உபகரித்த உபகாரத்தை அநுஸந்தித்தவாறே தாம் இதுக்கு முன்பு ஆழ்வார் விஷயத்தில் நின்ற நிலையடங்க முதலடியிட்டிலராகத் தோன்றுகையாலே அவர் பண்ணின வுபகாரத்தைப்பேசுகிறார். 186 "कृत्स्नां वा पृथिवीं दद्यान्न तत्तुल्यं कथञ्चन" (க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாந்ந தத்துல்யம் கதஞ்சந) என்கிறபடியே ஆசார்ய விஷயத்திலெல்லாம் செய்தாலும் அவன் பண்ணின உபகாரத்தைப் பார்த்தால் ஒன்றும் செய்யப்பெற்றதில்லை என்னும்படியாய்த் திருப்பது. அவன் இவனுக்கு உபகரித்தது ஸர்வேச்வரனையாறல் இன்னமும் ஒரு ஸர்வேச்வரனுண்டாகிலிறே இவனுக்குக் கொடுத்து ப்ரத்யுபகாரம் பண்ணினாலாவது; ஆகையால் என்றும் குறைப்பட்டே போமித்தனை.

வ்யா:—(பயனன்றாகிலும்) ஒருவன் ஒருவனுக்கு உபகரிப்பது தனக்கொரு ப்ரயோஜநத்தைப் பற்றியிறே; அங்ஙனொரு ப்ரயோஜநமில்லையேயாகிலும். (பாங்கலராகிலும்) ப்ரயோஜநமில்லாவிட்டால் சொல்லும்ஹிதம் கேட்கைக்குப் பாங்காயிருக்கலாமிறே; அங்ஙன் பாங்கின்றிக்கே இருந்தார்களேயாகிலும். இப்படியிருக்கிறவர்களுக்கு ஹிதம் சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமென்னென்னில்; இவர்களனர்த்தம் பொறுக்கமாட்டாமை சொல்லுகிறது. ராவணனுடைய அனர்த்தமெளசைக்கண்டு 187 "मित्रौपयिकं कर्तुं"

(மித்ரமௌபயிகங்கர்த்தும்) என்று அவனுக்குக்கூட ஹிதம் சொன்னாளிறே பிராட்டி; ஒருவன் தலைக்கடையையும் புறக்கடையையுமடைத்துக் கொண்டுகிடக்க, அவ்வகம் நெருப்புப்பட்டு வேவாநின்றால் — கண்டுநிற்கிறவர்களுக்கு அவிக்கவேண்டியிருக்குமிறே; அப்படியேயாய்த்து ஆழ்வார்படியும்.

(செயல் நன்றாக) தன்னுடைய செயலாலே இவையெல்லாம் நன்றாம்படி; இவனுடைய செயலா(லெ?)லே எல்லாம் நன்றாம்படி என்னவுமாம். (திருத்திப்பணிகொள்வான்) § "தீர்த்தவடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல" என்று ப்ராப்யமும் ப்ராபகமும் தானேயென்று அத்யவஸித்திருக்குமவர்களுடைய விரோதியைப்போக்கி அடிமை கொள்ளுமவனென்றதிறே ஸர்வேச்வரனை; அவ்வளவன்றிக்கே, அவையொன்றுமின்றிக்கேயிருக்குமவர்களையும் திருத்திப்பணி கொள்ளுமவரிறே இவர். "பணிகொள்வான்-குருகூர்நம்பி" என்றந்வயம்.

(குயில்நின்றாரித்யாதி) இவர் ஆற்றாமையாலே ஒரு காலத்திலே ‡ "காணவாராய்" என்று கூப்பிடுவதுமொரு பாசுரமுண்டு. ஹர்ஷத்தாலே / "பாவர் நிகரகல்வானத்தே" என்று களித்துச் சொல்லுவதும் ஒரு பாசுரமுண்டு; இரண்டு பாசுரத்துக்கும் குயிலாயிற்றுப் பயிற்றுவன. இவர் பேச்சைக் கேட்கச் செவிபெற்றாலே அவையும் இவர் பாசுரத்தைச் சொல்லுமாயிற்று. (குருகூர்நம்பி) † "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்" என்று சேதநரளவின்றியே திர்யக்குகளளவிலுமேறும்படியாய்த்து ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது.

(முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே) உன்னுடைய ச்லாக்யமான திருவடிகளுக்கு அன்பை முயலாநின்றேன். யத்நியாநின்றேன். ¶ "என்னைத்தீமனம் கெடுத்தாயுனக்கென்செய்கேன்" என்று அவர்தாம் அருளிச்செய்யுமாபோலே பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாமையாலே தடுமாறுகிறார்.

பத்தாம்பாட்டுக்கு நம்பிள்ளையீடு முற்றிற்று.

---

§ திருவாய் 3-5-11. ‡ திருவாய் 8-5-2. / திருவாய் 4-5-8.
† திருவாய் 9-7-2. ¶ திருவாய் 2-7-8.

## பதிகோராம்பாட்டு

11. அன்பன்றன்னை யடைந்தவர்கட்கெல்லா
மன்பன் தென்குருகூர்நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார் பதி வைகுந்தம்காண்மினே.

பதவுரை:—அன்பன் தன்னை—ஆச்ரித பக்ஷபாதியான எம்பெருமானை, அடைந்தவர்கட்கு எல்லாம் — ஆச்ரயித்தவர்களான ஸகல பாகவதர் பக்கலிலும், அன்பன் — பக்தியையுடையரான, தென் குருகூர் நகர் நம்பிக்கு—நம்மாழ்வார் விஷயத்திலே, அன்பன் ஆய்—பக்தனாயிருந்துகொண்டு, மதுரகவி சொன்ன சொல்—மதுரகவி அருளிச்செய்த இத்திவ்யப் பிரபந்தத்தை, நம்புவார்—தங்களுக்குத் தஞ்சமாக) விச்வஸித்திருப்பவர்களுக்கு, பதி—வாஸஸ்தாநமாவது, வைகுந்தம் காண்மின்—பரமபதமாம்.

## நஞ்சீயர் வ்யாக்யாநம்

நிகமத்தில், இவரருளிச்செய்த ப்ரபந்தத்தைக் கற்றூர்க்கு ஆழ்வாரானை பரிமாறும் ஸ்ரீவைகுண்டமே தேசமென்கிறார்.

(அன்பனித்யாதி) ஈச்வரத்வமன்று ஸ்வரூபம், எம்பெருமான் இருந்ததேகுடியாக எல்லாருக்கு மொருதலையாயிருக்கை. 194"**ரிபூணாமபி வத்ஸல:**"(ரிபூணாமபி வத்ஸல:)என்கிறபடியே.(தன்னையுடைந்த வரித்யாதி) ஏவங்குண விசிஷ்டனான எம்பெருமானை ஆச்ரயித்தார்க்கெல்லாமன்பராயிருக்கை ஆழ்வாருக்கு ஸ்வரூபம். தந்தாம் ஸத்தையிலே யன்றோ எல்லாரும் ஸ்நேஹிப்பது.

(தென்குருகூரித்யாதி) ஆழ்வாருக்கே அன்பராய் இருக்கை ஸ்ரீமதுரகவிகளுக்கு ஸ்வரூபம். ப்ரீதிப்ரேரிதராய்க்காணும் சொல்லிற்று. தாம் காணவந்த சோழரோபாதி. ப்ரீதிகாணும் சொல்லுவித்தது. இவர் §"முன்சொல்லும்" என்பது ப்ரீதியைக்காணும்.

(நம்புவாரித்யாதி) இது கற்றூர்க்கு வாஸஸ்தாநம் கலங்காப் பெருநகரான பரமபதம்; இது வ்யாஹதபாஷணமாயிருந்ததி. ஆழ்வாரை

§ திருவாய் 7-9-2.

ப்ராப்யமாகச் சொன்னால் திருநகரியே ப்ராப்யதேசமாக வேண்டாவோ வென்னில்; திருநகரியிலே பொலிந்து நின்ற பிரானையும் ஆழ்வாரையும் கூடச்செல்லுவது. § "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ?" என்கிறபடியே ஆழ்வாரையொன்றுமேயாய்த்து அங்குச்செல்லுவது.

சேதநனுக்கு ப்ராதிகூல்யத்தில் நின்றும் நிவ்ருத்தனானேனென்று தோற்றும்போது ஈச்வரன்பக்கல் ஸ்நேஹித்திருக்க வடுக்கும். ஈச்வரன் பக்கல் ஸ்நேஹித்திருக்கையாவது-அவனடியாரளவும் ஸ்நேஹித்திருக்கை. அவர்களெல்லாருக்கும் ப்ரியம் செய்கையாவது - ஜ்ஞாநப்ரதன் பக்கலிலே ஸ்நேஹித்திருக்கையிறே. ஆகையாலே திருநாட்டை ப்ராப்யமாகச் சொல்லிற்று.

அதவா; நம்புவாரிருந்தவிடமே வைகுந்த மென்னவுமாம் - திருநாடென்றும் லீலாவிபூதியென்றும் விபாகமில்லையோவென்ன, நம்பிதிருவழுதி வளநாடுதாஸர் வார்த்தை,- "கூரத்தாழ்வான் மகன் பிறந்தபின்பு இடைச்சுவர் தள்ளி ஒரு போகியாய்த்துக்காண்" என்று பணித்தான்.

நஞ்சீயர் வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.
நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

## நம்பிள்ளை ஈடு

நிகமத்தில், (அன்பன்றன்னை) இவர் ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வாஸபூமி பரமபதமென்கிறார்.

(அன்பன்) வாத்ஸல்யத்தை நிரூபகமாகவுடையவன்; இவனுடைய வாத்ஸல்யம் 194 "रिपूणामपि वत्सलः" (ரிபூணாமபி வத்ஸல:) என்கிறபடியே ஸர்வவிஷயமாயாய்த்திருப்பது; அதுக்கடி 195 "देवानां दानवानाञ्च सामान्यमधिदैवतं" (தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்) என்று ஸம்பந்தம் பொதுவாயிருக்கையாலே. (தன்னையடைந்தவர்கட்கெல்லாமன்பன்) ஆழ்வாருடையவன்பு அங்ஙன் பொதுவாயன்றாய்த்திருப்பது. ‡ "பரமனைப் பயிலும் திருவுடையார் யவரேலுமவர்கண்டீர் எம்மையாளும் பரமர்" என்றிறேயிருப்பது.

---

§ திருவிரு-75. ‡ திருவாய் 3-7-1.

(தென்குருகூர்நகர் நம்பிக்கு அன்பனாய்) பகவத் விஷயத்தளவிலன்றிக்கே ததீயரளவிலுமன்றிக்கே ஆசார்ய விஷயத்திலே ஸக்தராய். தனக்குப் புருஷகாரம் வேண்டியிருக்கில் பகவத் விஷயத்தைப் பற்றவடுக்கும். அங்ஙன் தானுகந்ததன்றிக்கே அவனுகந்தது செய்யவேண்டியிருக்கில் பாகவதர்களைப் பற்ற அடுக்கும்; அவர்களெல்லாருமுகந்தது செய்யவேண்டியிருக்கில் ஆசார்யனைப் பற்றவடுக்கும்; ஆசார்யன் முதலிலே அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே உத்தேச்யனும்; பின்பு பகவத்குணங்களிலே அவகாஹித்த குணானுபவத்தாலல்லது செல்லாதபடியானால் போதயந்த: பரஸ்பரம் பண்ணுகைக்கு உசாத்துணையாகையாலே உத்தேச்யனும்; பகவத்ப்ராப்திக்குப் புருஷகாரபூதனாய்க்கொண்டு உத்தேச்யனும். ப்ராப்தி தசையிலே ஸாத்யவிவ்ருத்திரூபத்தாலே உத்தேச்யனாம்.

(மதுரகவிசொன்னசொல்) தமக்குப் பாசுரமே இனிதாயிருக்கையாலே மதுரகவியென்கிறார். (நம்புவார்பதியித்யாதி) இனிதாயிருந்ததில்லையேயாகிலும் இப்ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வஸ்தவ்யதேசம் பரமபதம்.

ஆழ்வார் உத்தேச்யராயிருக்கில் இவருக்குத் திருநகரியன்றோ ப்ராப்யமாவதென்னில், திருநகரியில் ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும் இருபுரியாய்த்துச்செல்லுவது. அங்ஙனன்றியே ஆழ்வாரையே செல்லும் தேசம் பரமபதம். /"அடியார் நிலாகின்றவைகுந்தம்" என்றும், ||"வானவர் நாடு" என்றும் சொல்லக் கடவதிறே.

நம்பிதிருவழுதிவளநாடுதாஸர், அவர்களிருந்த தேசந்தான் பரமபதமென்று சொல்லுவர். கூரத்தாழ்வான் மகன் பிறந்தபின்பு இடைச்சுவர்தள்ளி இரண்டு வீடுமொன்றாய்த்தக்காவென்று பணித்தாரென்று பிள்ளையருளிச்செய்வர்.

நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

/ திருவிரு-75 || திருவாய் 3-6-6.